பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா. 6.00

# வலம்புரி

Valampuri

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | புரட்டாதி 13 | செவ்வாய்க்கிழமை | (30.09.2003) | தொலைபேசி - 2223378 | ஒலி 285

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது

ரா
ம்
கோ
சீமெந்து

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

# மன்னார் தேவாலயத்தை நேற்று இனந்தெரியாதோர் தாக்கினர்!

## பதற்றத்தைத் தணிக்க ஊரடங்கு அமுல்

(மன்னார்)

**மன்னார் முந்தல் திடலில் அமைநதிருந்த அந்தோனியார் தேவாலயம் நேற்று அதிகாலை இனந்தெரியாதோரால் தரைமட்டமாக்கப்பட்டது. இதனையடுத்து மன்னாரில் ஏற்பட்ட பதற்ற நிலையைத் தணிப்பதற்காக இன்று அதிகாலை 4 மணிவரை உத்தியோகப்பற்றற்ற ஊரடங்கு உத்தரவைப் பொலிஸார் பிறப்பித்துள்ளனர்.**

மன்னார் எருக்கலம்பிட்டிக்கும், பள்ளிமுனைக்குமிடையில் கடலோரத்தில் உள்ள முந்தல் திடலில் அமைந்திருந்த அந்தோனியார் தேவாலயமே நேற்று அதிகாலை இனந்தெரியாதோரால் இடிதது்த் தரைமட்டமாக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தையடுத்து அங்கு வாழும் 90 வீதத்திற்கும் மேற்பட்ட கத்தோலிக்க மக்கள் மாபெரும் ஆர்ப்பாட்டம், மறியற் போராட்டத்தை

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் கைகலப்பு இருவர் படுகாயம்

### தேவாலயம் தாக்கப்பட்டதன் எதிரொலி

(மன்னார்)

மனனார் முந்தல் திடலில் அமைந்திருந்த அந்தோனியார் தேவாலயம் இனந்தெரியாதோரால் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து மன்னார் நகரில் நடைபெற்ற மறியல் போராட்டத்தின்போது ஏற்பட்ட கைகலப்பில் காயமுற்ற இருவர் மன்னார் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேறறிரவு இடம்பெற்ற சம்பவத்தை அடுத்து மன்னார் அரச அதிபர் எஸ். விஸ்வலிங்கம், மன்னார் ஆயர் அதி வண. இராஜப்புயோசப் மற்றும் இராணுவப் பொலிஸ் உயரதி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கதிர்காமருக்கு அச்சுறுத்தல்

(கொழும்பு)

முனனாள் வெளிவிவகார அமைச்சரும், ஜனாதிபதியின் ஆலோசகரும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் தேசிய பட்டியல் எம்.பி



யுமான லக்ஷ்மன் கதிர்காமரின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அனுரா பண்டாரநாயக்கா அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளார்.

அநத அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

முனன்ாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரைக் கொலை செய்யத் திட்டமிட்டிருப்பதாக ஊடகங்களில் தகவல் வெளிவந்துள்ளமை அவரின் பாதுகாப்புக்கு ஏற்பட்ட அச்சுறுத்தல் எனவும், அதனைத் தவிர்க்கும் வகையில் அவரின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட வேண்டும் எனவும் அவ் அறிக்கையல் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.(வ)

# மீளக் குடியமர்வு குறித்த கோரிக்கைக்கு யாழ். தளபதி உரிய பதிலைத் தரவில்லை

### சமாதானத்துக்கான மக்கள்குழு அதிருப்தி; தமிழ் இளைஞர்களை பொலிஸில் சேருமாறு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கில் உள்ள உயர் பாதுகாப்புப் பிரதேசத்தில் பொதுமக்களை மீளக் குடியமர்த்துதல் தொடர்பில் தாம் விடுத்த கோரிக்கைக்கு படைத்தரப்பு உரிய பதிலைத் தரவில்லை என சமாதானத்துக்கும், நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழுவின் பிரதிநிதிகள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள சமாதானத்திற்கும், நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழுவின் பிரதிநிதிகளுக்கும், யாழ். மாவட்ட இராணுவ, கடற்படை மற்றும் பொலிஸ் அதிகாரிகளுக்கும் இடையில் அதியுயர் பாதுகாப்பு வலயம், மக்களின் மீள் குடியமர்வு, மீனவர் எதிர்நோக்கும் பிரச்சினைகள், ஏ-9 பாதை திறந்திருககும் நேரத்தை நீடித்தல், திருட்டுச் சம்பவங்களைத் தடுத்தல் ஆகியன குறித்த முக்கிய கலந்துரையாடல் ஒன்று நேற்றுக் காலை 10.30 மணிமுதல் பி.ப. 1.00 மணிவரை யாழ. நகரில் உள்ள 511 ஆவது படைத் தலைமையகத்தில் இடம் பெற்றது.

இச் சந்தர்ப்பத்திலேயே மக்களின் மீள் குடியமர்வு குறித்த தமது கோரிக்கைக்கு யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா உரிய பதிலைத தரவில்லை என சமாதானத்திற்கும், நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழுவினர் தெரிவித்தனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சுகாதாரத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது

(கொழும்பு)

ஏற்கனவே திட்டமிட்டபடி சுகாதார சேவைகள் தொழிற்சங்க கூட்டமைப்பு ஏனைய தொழிற்சங்கங்களுடன் கூட்டாக சேர்ந்து கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. ரயில் நிலையத்தில் தொடங்கிய ஊர்வலம் தேசிய வைத்தியசாலைவரை சென்றது. இதில் ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்டனர். தொடர்ந்து லிப்ரன் சதுக்கத்தில் கூட்டமும் நடைபெற்றது.

இதேவேளை, வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட தற்காலிக சமயாசமய ஊழியர்கள் 1600 பேர்களும், தொழிற் பாதுகாப்புக்கு உத்தரவு வழங்கப்பட்டதை அடுத்து வேலைக்குச் செல்வதாகத் தீர்மானித்துள்ளனர். இது தொடர்பில் சமயாசமய, ஒப்பந்த ஊழியர்கள் தமது வேலைகளை இழந்துள்ளதாக சுகாதார அமைச்சு ஏற்கனவே வெளியிட்ட சுற்றறிக்கையைச் செல்லுபடியற்றதாக்கும் வகையில் சுகாதார அமைச்சு புதியதொரு சுற்றறிக்கையை நேற்று வெளியிட்டுள்ளது.

ஊழியர்களின் சம்பள முரண்பாடுகளை தீர்த்துவைக்கும் கோரிக்கைகளை நிதி அமைச்சுக்குச் சமர்ப்

(10 ஆம் பக்கம் பார்க்க)



சுகாதாரத்துறை சமயாசமய ஊழியர்களை மீண்டும் வேலையில் இணைத்துக் கொள்ளுமாறு கோரி தொழிற்சங்க கூட்டுமுன்னணி ஊழியர்கள் கோட்டை புகையிரத நிலையம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோது பிடிக்கப்பட்ட படம்.

## யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்களின் பிரச்சினைகள் ஆராயப்பட்டன

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழக கலைப்பீட மாணவர்களுக்கிடையே கடந்த சில நாட்களாக நடைபெற்று வந்த பிரச்சினைகள் நேற்றைய கலந்துரையாடல்களையடுத்து முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடல் முற்பகல் 11.15 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது. கலைப்பீடாதிபதி, சிரேஷ்ட மாணவ ஆலோசகர், பேராசிரியர்கள், துறைத் தலைவர்கள், விரிவுரையாளர்கள், மாண

(10 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தொண்டு நிறுவனங்களின் புனர்வாழ்வு திட்டங்களில் சமநிலை பேணப்படவில்லை

## அரச சார்பற்ற நிறுவனங்கள் அரச அதிபருக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் நிதி நிறுவனங்கள் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களினால் செயற்படுத்தப்படும் திட்டங்கள் மூலம் மக்களை மேலாண்மை நிலைக்குச் செல்ல வித்திட வேண்டும் என்ற அடிப்படையில் புனர்வாழ்வுத்திட்டங்களைச் செயற்படுத்துவதற்கான நெறிகாட்டல் திட்டம் ஒன்றின் அவசியம் பற்றி யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் நிலையம் யாழ். மாவட்ட அரச அதிபரிடம் வற்புறுத்தியுள்ளது.

இத்திட்டம் பற்றி இணையம் யாழ். அரச அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் கூறப்பட்டுள்ளதாவது;

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பல தரப்பட்ட அமைப்புக்களாலும் அமுல செய்யப்படும் திட்டங்கள் மூலம் பாதிக்கப்பட்ட மக்களின் அல்லது குடும்பங்களின் வாழ்க்கை நிலையில் குறிப்பிட்ட மாற்றம் எதுவும் இடம பெறவில்லை.

உதவிகள் வழங்கலில் சில இடங்களுக்கு அபரிதமான உதவியும் சில இடங்களுக்கு எவ்விதமான உதவியும் கிடைக்காத நிலை காணப்படுகின்றது.

இந்நிலையில்,கிடைக்கும் உதவிகள் யாவருக்கும் சமச்சீராக இருத்தல் வேண்டும்.

திட்ட அமுலாக்கலின் பின் மக்களின் கருத்துக்களுக்கும் அபிப்பிராயங்களுக்கும் வாய்ப்பளிக்கப் படவேண்டும். மாவட்டத்தில் இயங்கும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் புதிய நிறுவனங்களைத் தோற்றுவிப்பதைத் தவிர்க்கவேண்டும்.

ஏற்கனவே இயங்கிவருமஉள்ளூா அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலம் தமது செயற்றிட்டங்களை அமுலாக்குவதை வலியுறுத்த வேண்டும்.

மேலும், யாழ். குடாநாட்டில் அமுல்செய்யப்படும் செயற்றிட்டங்களுக்குக் கிடைக்கும் நிதி வளம் பற்றிய தகவல்களை யாழ். அரச அதிபருக்கு வெளிப்படுத்த வேண்டும்.இது விடயத்தில் வளப் பகிர்வுக்கோட்பாடு கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

நிறுவனங்களால் அமுல்செய்யப் படும் திட்டங்களின் பயனாளிகள் தெரிவு போன்ற விடயங்களை மக்கள் எடுத்துக்கூறுவதற்கு வசதியாக குறைகேட்கும் அதிகாரி ஒருவர் நியமிக்கப்படவேண்டும் என்றுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக இணையப் பிரதிநிதிகள் விரைவில் அரச அதிபரை நேரில் சந்தித்து விவாதிக்கவுள்ளதாகத் தெரியவருகின்றது.

(உ-16)


## சிறு விளம்பரம்

### திருத்துதலும் ஒட்டுதலும்

மூக்குக் கண்ணாடி ஒட்டுதல், சகல கெமராவகைகள், எலெக்ரோனிக் பிளாஸ்கன் திருத்துதல்,சிறிய பிளாஸ்டிக் பாட்ஸ் ஒட்டுதலுக்கு. தொடர்பு:சு.நாராயணசாமி,இல.301, கஸ்தூரியார் வீதி(மேல்மாடி),கனனாதிட்டிச் சந்திக்கு அருகில். (7497)


## அரசியல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தமிழர் தேசிய விழிப்புணர்வுக் கழகம் நடாத்தும் அரசியல் கருத்தரங்கு இன்று மாலை 3.00மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் யாழ். பல்கலைக்கழக அரசறிவியல்துறை விரிவுரையாளர் சகாயசீலன், சமகால அரசியல் பற்றிய ஓர் பன்முகப் பார்வை எனும் விடயத்தில் கருத்துரை வழங்கவுள்ளார். (ந-5)

## நிதி ஒதுக்கீடு

(நெல்லியடி)

பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்ட நிதியிலிருந்து, யா/ விக்கினேஸ்வராக் கல்லூரியின் பாண்ட் வாத்தியக் கருவிக் கொள்வனவுக்கென,யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.ஜி. கஜேந்திரகுமார் 1 இலட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளார். (உ-44)

# அணிவதற்கு ஏற்ற ஆடைகளின்றி நலன்புரி நிலையச் சிறார்கள் அவலம்

(யாழ்ப்பாணம்)

சங்கானை பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள 19 இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களில் 452 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 768 பேர் பெரும் கஷ்டங்களை எதிர்கொண்டு வாழ்ந்து வருகின்றனர் எனத் தெரியவருகின்றது.

இங்குள்ள தற்காலிக அமைவிடங்கள் எதிர்வரும் மாரி மழைக்குத் தாக்குப்பிடிக்க முடியாது.

அத்துடன், இங்கு வாழ்கின்ற சிறுவர்களுக்குப் போதிய ஆடைகள் இல்லாமல் இருப்பதாகவும் அறியப்படுகின்றது.

இது இவ்விதமிருக்க, சங்கானை பிரதேச செயலர் பிரிவிலுள்ள நெல்லியான், சுழிபுரம் திருவடி நிலை ஆகிய இடங்களில் குறிப்பிடப்பட்ட சில பகுதிகள் உயர்பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்ட நிலையில் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

(உ-16)

# ஆயுதம் ஏந்திப் போராடிய புலிகள் கலாசார நிகழ்வுகளில் ஈடுபடுகின்றனர்

## அமைச்சர் வஜிர அபயவர்த்தன தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்த காலத்தில் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த தமிழீழ விடுதலைப்புலிகள் தற்போது பொங்குதமிழ் போன்ற கலாசார நிகழ்ச்சிகளை நடத்தி வருவதையிட்டு மக்கள் அனைவரும் மகிழ்ச்சியடைய வேண்டும்.

பொது நிர்வாக முகாமைத்துவ அமைச்சர் வஜிர அபயவர்த்தன கம்பஹா மாவட்டத்தில் நடைபெற்ற நடமாடும் சேவையில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து பேசிய அவர், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் நீண்டகாலச் சிந்தனை காரணமாக சமாதானத்தின் நன்மைகளை மக்கள் அனுபவித்து வருகின்றனர்.

இதனை ஐக்கிய தேசிய முன்னணி அரசின் உன்னதப் பெறுபேறாகவே கருத வேண்டும்.

மீண்டுமோர் யுத்தம் ஆரம்பிக்கப் படுமானால், அதற்குரிய சகல பொறுப்புக்களையும் அரசாங்கமே ஏற்றுக் கொள்ளவேண்டும் என சில அரசியல் கட்சிகள் குற்றம்சாட்டி வருகின்றன.

நாட்டில் நிரந்தர சமாதானமும், அமைதியும் நிலவுவதை விரும்பாத சில தீய சக்திகளே இவ்வாறான கேள்விகளையும்,விவாதங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் நடத்தி வருகின்றன.

ஆனால், தீய சக்திகளின் எண்ணமும் பழிவாங்கும் நடவடிக்கைகளும் இனி ஒருபோதும் பலிக்காது என அமைச்சர் அங்கு சூளுரைத்தார்.

இந் நடமாடும் சேவை நிகழ்வில், அமைச்சர்களான கரு ஜெயசூரிய, ஜயலத்ஜெயவர்த்தன, சுரணிமல ராஜபக்ஷ, சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா ஆகியோர் கலந்து கொண்டனர். (தி-61)


## உங்கள் வலம்புரியின் வாரமலர்




## சங்குநாதம்

- அமெரிக்காவின் ஆதிக்கத்திற்குள் அகப்பட்ட ஐ.நா. சபை -கோவையூர் ஜெயன்
- தமிழக முதல்வர் ஜெயாவின் ஆட்சியில் கதிகலங்கும் அரசியல் தலைவர்கள் -டொறிங்ரன்
- முஸ்லிம் தலைவர்களின் கூட்டு சமாதானத்திற்கு வேட்டு. -விதுரன்
- திருகோணமலைத் துறைமுகத்தில் அமெரிக்காவின் கழுகுப்பார்வை - பவானி
- ஆலடி மாநாடு
- வியாசரின் பதில்கள்.
- செங்கை ஆழியானின் ஈழராஜா எல்லாளன் (தொடர் நவீனம்)
- பொன்.கணேசமூர்த்தியின் கடிவாளம் இல்லாத கனவு (நெடுங்கதை)

இன்னும் பற்பல...

வாசிக்கத் தவறாதீர்கள் திங்கள் வைகறையில் உங்கள் உள்ளங்களில் ஒலிப்பது

விலை ரூபா 14.00

வலம்புரியின் வாரமலர் பக்கங்கள் - 20 விலை :-14.00

சங்கு நாதம்

29செப். - 5ஒக்.2003 Sankunatham

# றக்பி போட்டியில் பிரகாசித்த இசிப்பொத்தான கல்லூரி

பிறிமியர் வெற்றிக் கிண்ணத்திற்கான பாடசாலைகள், மற்றும் களகங்களுக்கிடையிலான நெக்-அவுட் முறையிலான றக்பி சுற்றுப் போட்டிகளின் இறுதிப் போட்டிகள் நேற்று முன்தினம் கொழும்பு, லண்டன், பிறேசிலில் உள்ள சீ.ஆர்.அண்ட் எவ்.சி.மைதானத்தில் நடைபெற்றன.

பாடசாலைகளுக்கிடையிலான பிறிமியர் வெற்றிக்கிண்ண றக்பி போட்டிகளில் 13, 15, 19 வயதிற்குட்பட்ட அணிகளுக்கான போட்டிகளில் கொழும்பு இசிபொத்தான கல்லூரி அணிகள் சம்பியன் கிண்ணங்களை சுவீகரித்துக் கொண்டன.

17 வயதிற்குட்பட்டவர்களுக்கிடையிலான போட்டியில், கண்டி திருத்துவக்கல்லூரி கிண்ணத்தைச் சுவீகரித்துக்கொண்டது.

கழகங்களுக்கிடையிலான போட்டியில் ஹவலோக் அணி சம்பியன் பட்டத்தைப் பெற்றுக்கொண்டது.

19 வயதுக்குட்பட்ட பாடசாலை அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியில் கொழும்பு இசிப்பொத்தான கல்லூரி அணி 22:0என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை வென்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-68)

# இந்திய ஹொக்கிஇரசிகர்களின் நம்பிக்கை வீண்போகவில்லை

மலேசியாவின் கோலாலம்பூரில் நடைபெற்றுவந்த ஆசியக் கிண்ண ஹொக்கிப் போட்டியின் இறுதியாட்டம் நேற்று முன்தினம் இந்திய, பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் நடைபெற்றது.

16 வருடங்களின் பின்னர் இவ்விரு அணிகளும் இறுதிப் போட்டியில் மோதிக்கொண்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ் இறுதிப் போட்டியில் இந்திய அணி பாகிஸ்தான் அணியை 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றிகொண்டு சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

முதற் சுற்று கடைசி லீக் ஆட்டத்தின் போது பாகிஸ்தான் அணி இந்திய அணியை 4:2என்ற இதே கோல் கணக்கில் வென்றிருந்த போதும் இறுதிப்போட்டியில் இந்திய அணியிடம் தோல்வியைத் தழுவிக் கொண்டது.

அரையிறுதிப் போட்டியில் இந்தியஅணி பலம்வாய்ந்த கொரிய அணியை 4:2என்ற கோல் கணக்கில் வெற்றிகொண்டு இறுதிப் போட்டிக்குத் தெரிவானதுடன் இந்திய ஹொக்கி இரசிகர்களிடையே இறுதிப் போட்டியில் இந்திய அணி பாகிஸ்தானை வெற்றிகொள்ளும் என்ற நம்பிக்கைகள் அதிகரித்துக் காணப்பட்டதாகவும், அதனை இந்திய வீரர்கள் மெய்ப்பித்திருப்பதாகவும் இந்திய ஹொக்கி அணியின் பயிற்றுநர் ராஜேந்தர் சிங் தெரிவித்துள்ளார்.

இந்த வெற்றியின் மூலம் இந்திய ஹொக்கி அணிக்கு பெருந்தொகை பணப்பரிசை இந்திய மத்திய அரசு வழங்குவதற்கு எண்ணியிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்திருந்தார். (உ-68)




# ஒப்பந்தத்தை இடையில் முறித்த காவ்பந்தாட்ட வீரர் றிவால்டோ

ஏசிமிலான் கால்பந்தாட்ட அணிக்காக விளையாடி வந்த பிரேசில் கால்பந்தாட்ட வீரர் றிவால்டோவுடனான ஒப்பந்தத்தை முடித்துக் கொள்ள அந்தஅணி தீர்மானித்துள்ளது.

றிவால்டோஷன் கோரிக்கைக்கு அமைய 2005ஆம் ஆண்டு வரை கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தை இடைநிறுத்திக்கொள்ள எண்ணியுள்ளதாக ஏசிமிலான் கால்பந்தாட்டக்கழகம் தெரிவித்துள்ளது.

31 வயதான றிவால்டே, ஏசிமிலான் கழகம் சார்பாக தனது திறமைகளை வெளிப்படுத்த சந்தர்ப்பங்கள் கிடைக்கவில்லையெனவும் போட்டிகளில் விளையாடச் சந்தர்ப்பங்கள் கிடைககாமையினாலேயே ஏசிமிலான் கால்பந்தாட்டக் கழகத்தில் இருந்து தாம் விலகிக்கொள்ள எண்ணியதாகவும் தெரிவித்துள்ளார்.

கடந்த உலகக்கிண்ணப் போட்டிகளின் போது பிறேசில் அணிக்காக சிறப்பான முறையில் விளையாடியிருந்த றிவால்டோ தான் முன்னர் விளையாடிவந்த பார்சிலோனா கால்பந்தாட்டக் கழகத்தில் இருந்து விலகிக்கொண்டு ஏசிமிலான் கால்பந்தாட்ட அணிக்காக விளையாடி வந்தமை இங்கு கூறிப்பிடத்தக்கது. (உ-68)

# பாகிஸ்தான் அணியுடன்மோதிய இந்திய அணிக்குப் படுதோல்வி

வளர்ந்துவரும் கிரிக்கெற் அணிகளுக்கிடையிலான முக்கோண ஒருநாள் கிரிக்கெற் போட்டிகளில் பாகிஸ்தான் அணியிடமும் இநதிய அணி தோல்வியைத் தழுவிக்கொண்டது.

நேற்று முன்தினம் கொழும்பு பிரேமதாஸ விளையாட்டரங்கில் நடைபெற்ற இப் போட்டியில் 37 ஓட்டங்களால் பாகிஸ்தான் அணி இந்திய அணியை வெற்றிகொண்டது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாட பாகிஸ்தான் அணியை அழைத்தது. இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 50ஆவது ஓவரில் சகல விக்கெற்றுக்களையும் இழந்து 137 ஓட்டங்களைப் பெற்றது.

பாகிஸ்தான் அணிக்காக நதீம் பவார் 34ஓட்டங்களை அதிக பட்சமாகப் பெற்றுக்கொடுத்தார். பந்து வீச்சில் இந்திய அணிசார்பாக கிருபான்பத்தன் 22ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 4விக்கெற்றுக்களை கைப்பற்றினார்.

இதன்படி 50 ஓவர்களில் 138 ஓட்டங்களை இலக்காகவைத்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணி, சகல விக்கெற்றுக்களையும் இழந்து 100 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொண்டதுடன், 37 ஓட்டங்களால் பாகிஸ்தான் அணியிடம் தோல்வியைத்தழுவிக்கொண்டது.

துடுப்பாட்டத்தில் ஆர்.சுக்கிளா இந்திய அணிக்கு21ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். பந்து வீச்சில் பாகிஸ்தான் அணி சார்பாக வசாட் மசூட்30 ஓட்டங்களுக்கு 4 விக்கெற்றுக்களையும் யூனைட்சியா யசீர் அரபாத் ஆகியோர் தலா 3 விக்கெற்றுக்களையும் கைப்பற்றினர். (உ-68)




மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் நடைபெற்ற ஹொக்கிப் போட்டியின் அரையிறுதிப் போட்டியில் நடப்பு சம்பியனான தென்கொரிய அணியை 4:2என்ற கோல்கணக்கில் தோற்கடித்தது இந்தியஅணி.

இந்த மகிழ்ச்சியை தனது அணி வீரர்களுடன் கொண்டாடும் பிரப் யோசிங்.

# இலங்கை இளம் வீரர்களிடம் இந்தியா தோற்றுப்போனது

இலங்கை, இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் வளர்ந்துவரும் கிரிக்கெற் அணிகள் பங்குகொள்ளும் சம்பியன் கிண்ணதிற்கான கிரிக்கெற் போட்டிகள் தற்சமயம் இலங்கையில் நடைபெற்று வருகின்றன.

இப் போட்டிகளின் முதலாவது போட்டியில் இலங்கை இந்திய வளர்ந்துவரும் கிரிக்கெற் அணிகள் கொழும்பு பிரேமதாஸ விளையாட்டரங்கில் கடந்த சனிக்கிழமை மோதிக் கொண்டன.

இதில் இலங்கை அணி 9 விக்கெற்றுக்கள் வித்தியாசத்தில் இந்திய அணியை வெற்றிகொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியஅணி சகல விக்கெற்றுக்களையும் இழந்து 136 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது.

இந்திய அணி சார்பாக தினேஷ் கார்த்திக் 42 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

இலங்கை அணி வீரரான லஷ்ஸித்த மாலிங்க தனது திறமையான பந்து வீச்சால் 14 ஓட்டங்களுக்கு 4 விக்கெற்றுக்களை கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை வளர்ந்துவரும் அணி, 32.4 ஓவர் முடிவில் ஒரு விக்கெற்றை மட்டும் இழந்து வெற்றிஇலக்கை அடைந்தது.

இலங்கை அணி சார்பாக உப்பிள்தரங்க 57 ஓட்டங்களையும், தரங்க பர்னவிதாரன ஆட்டமிழக்காமல் 55ஓட்டங்களையும் பெற்றனர். (உ-68)

# கிரிக்கெற் போட்டி

இலங்கை ஏ கிரிக்கெற் அணிக்கும் கென்ய கிரிக்கெற் அணிக்கும் இடையில் 5ஒருநாள் கிரிக்கெற் போட்டிகள் இடம்பெறவுள்ளன. எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 19ஆம் திகதிமுதல் 26ஆம் திகதிவரை இந்தப் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

முதலாவது போட்டி ஒக்டோபா மாதம் 19ஆம் திகதியும் இரண்டாவது போட்டி 20ஆம் திகதியும் மூன்றாவது போட்டி 22ஆம் திகதியும் நான்காவது, ஐந்தாவது போட்டிகள் முறையே 25,26,ஆம் திகதியிலும் இடம்பெற விருக்கின்றன. (உ-68)

# இந்தியத் தேர்தல் ஆணையாளரை இலங்கைக்கு அழைக்கத் தீர்மானம்

(கொழும்பு)

தேர்தல் முறையை மாற்றி அமைப்பது குறித்து இந்தியத் தேர்தல் ஆணையாளரின் ஆலோசனையைப் பெறுவதற்கு தேர்தல் முறையை மாற்றி அமைப்பது தொடர்பாக நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக் குழு தீர்மானித்துள்ளது.

இதற்கமைய அடுத்த மாதமளவில் அவரை இலங்கைக்கு அழைக்க இருப்பதாக பாராளுமன்றத் தெரிவிக் குழுவின் தலைவர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

பலதரப்பட்ட இனங்களின் பிரதி நிதிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் இந்தியத் தேர்தல் முறைஊடாக பல்வேறு ஆலோசனைகளை பெறமுடியும் என்பதற்காகவே அவரை அமைக்கத் தீர்மானித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி-61)

# எமது போராட்டத்தின் நியாயத்தை உலகறியச் செய்தவன் தியாகி திலீபன்

## மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் உரை

(மருதங்கேணி)

எமது போராட்டமானது தர்மத்தின் பாற்பட்டது, நீதியின் பாற்பட்டது, நியாயத்தின் பாற்பட்டது என்பதை இலங்கை- இந்திய அரசுக்கு மட்டுமல்ல, சர்வதேச உலகமே உணரவேண்டும் என்பதற்காகத்தான் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து தியாகி திலீபன் உண்ணாவிரதம் இருந்தான்.

கிளிநொச்சி சந்திரன் பூங்காவில் இடம்பெற்ற தியாக தீபம் லெப். கேணல் திலீபனின் 16ஆம் ஆண்டு நினைவு இறுதிநாள் நிகழ்வில் கலந்து கொண்ட தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் பேசுகையில்,

தியாகி திலீபன் வீரச்சாவடைந்த காலத்தில் எம்மை உணர்ந்து கொள்ளாத சர்வதேச நாடுகள், எமக்குத் தடைவிதித்த சர்வதேச நாடுகள் கூட இன்று எமது அரசியல் நகர்வை ஏற்றுக்கொண்டு, இந்த தமிழர்கள் போராட்டம் நீதியானது என்று அறிக்கைவிடுகின்றன.

விடுதலைப் புலிகளினதும் மக்களினதும் வலுவே இன்று அரசினை பேச்சுவார்த்தை நிலைக்குக் கொண்டு வந்துள்ளது.

எமது மண்ணுக்கு உரிமை கிடைக்க வேண்டும், எமது மண்ணை நாமே ஆளவேண்டும் அதற்கு எமது அமைப்பும் தமிழினமும் வலுவுடன் இருக்கவேண்டும். மாவீரர்களின் இலட்சிக்கனவு நிறைவேறி, வருங்கால சந்ததி தமிழீழ மண்ணில் சுதந்திரமாக வாழ்வதற்கு நாங்கள் ஒவ்வொருவரும் பங்களிப்பு செய்வோம்மென திலீபனின் நினைவுநாளில் சபதம் எடுத்துக்கொள்வோம் என்றார். (உ-35)

# ஆலோசனை வழங்கல்

(யாழ்ப்பாணம்)

சித்திரமும் வடிவமைப்பு பட்டப் படிப்பு அனுமதித் தேர்வு பற்றிய ஆலோசனைகளை ஆத்திசூடி வீதி, கந்தர்மடம் என்ற முகவரியில் இயங்கும ஐ. ஏ.ரி.சித்திரப் பயிற்சி நிறுவனத்தில் பெற்றுக்கொள்ளலாம் என அதன் இயக்குநர் அறிவித்துள்ளார்.(உ)

## இன்னும் ஒரு தகவல்

# மாறுபட்ட கோணம்

இன்று வீட்டிலும் சரி, நாட்டிலும் சரி, உலகத்திலும் சரி எங்கு பார்த்தாலும் ஏகப்பட்ட சண்டைகள் பிரச்சினைகள் சச்சரவுகள். இதற்கு என்ன காரணம் என்று ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ந்து பல காரணங்களைக் கூறுகின்றார்கள். பிரச்சினைகளைத் தீர்க்க முடியாமல் போகும காரணங்களில் மிக முக்கியமான காரணம் என்ன என்று கண்டுபிடித்துள்ளனர்.

ஒரு பிரச்சினையை நாம் எப்பொழுதும் நமது கண்ணோட்டத்தில் தான் பார்க்கின்றோம். இதன் படியே தீர்ப்பும் கூறுகின்றோம். இதன்படியே முடிவும் எடுக்கின்றோம். அப்படியில்லாமல் அந்தப் பிரச்சினையை அந்தத் தவறுக்கு உரியவர்கள் என்று நாம் நினைக்கின்றோமே அவர்களது கோணத்திலிருந்தும் பார்க்கவேண்டும். அப்படிப் பார்க்கும்போது தான் அந்தப் பிரச்சினையின் முழுமையான தன்மை நமக்குத் தெரியும்

அவர்களது கோணத்திலிருந்து நாம் பார்ப்பதுமில்லை. மதிப்பளிப்பதுமில்லை. நாமாக ஓர் அணுகுமுறை, ஓர் கருத்து, ஒரு முடிவு, ஒரு தண்டனை என எமது கண்ணோட்டத்தில் இருந்து தான் பேசிக்கொண்டிருக்கின்றோமே தவிர மற்றவரது கோணத்திலிருந்து யோசிப்பதில்லை.

இப்படி அடுத்தவரின் கண்ணோட்டத்தில் இருந்து சிந்தித்துப் பார்த்தோமானால் நல்ல காரணங்கள் அகப்படலாம். இன்னும் ஒன்று! அவரது பக்கமே கூட நியாயம் இருக்கலாம். அதனால் ஒரு பிரச்சினை என்று வரும்போது நமது நிலைப்பாட்டிலும் நின்று யோசிக்க வேண்டும். அதுபோல் அவரது நிலைப்பாட்டிலிருந்தும் யோசிக்க வேண்டும். அப்படி யோசிக்கும்போது தான் பிரச்சனைகளை எளிதாக்கிக் கொள்வதற்கான வாய்ப்புக்கள உருவாகும்.

இந்த மனோபாவம் நம்மிடம குறைந்து போய்க்கொண்டிருக்கின்றது என்று அறிஞர்கள் கூறுகின்றனர். அப்படி அறிஞர்களின் கோணத்தில் இருந்து பார்க்கும்போது என்ன நன்மை விளைகின்றது என்றால், அவர்களிடமுள்ள குற்றத்தைக்கூட நாம் குறைத்துக்கொள்ள முடியும்.

பொதுவாக இளைஞர்களிடம் இன்று வன்முறை உணர்வு நிறைந்திருக்கின்றது. இந்த வன்முறை உணர்வு தவறானது என்று நமக்குத் தெரியும். உடனே என்ன செய்கின்றோம் என்றால் வன்முறை உணர்வு உள்ள இளைஞர்களை நாம் வெறுக்கின்றோம். அல்லது விமர்சனம் செய்கின்றோம். அல்லது அவர்களைக் கண்டிக்க வேண்டும் என்று நினைக்கின்றோம். ஆனால் ஒரு இளைஞன் இத்தகைய சூழ்நிலைக்கு ஏன் வந்தான் என்று நாம் அவனது கோணத்தில் இருந்து யோசித்துப்பார்த்தோமானால் அந்தச் சூழ்நிலையை அகற்றுவதற்கு நாம் முயற்சிக்கலாம்.

அதற்கு அறிஞர்கள் சில வழிகளைக்கூறியுள்ளார்கள். ஒரு இளைஞன் வன்முறை செய்து பிழைக்கின்றான். அதன் மூலம் தான் தனது ஊரிலே பெரிய சண்டியன் என்று புகழ் அடைய எண்ணுகின்றான். இதற்காகக் கையில் கத்தியையும் எடுத்துக்கொண்டு அலைகின்றான். இதன் மூலமாகத்'தான் புகழடைய முடியும என்று நினைக்கின்றான். இப்போது அவனுக்குள் புகழ்கிடைக்க வேண்டும் என்கின்ற எண்ணம் உண்டு. கையில் தேவையற்ற ஒரு ஆயுதத்தைத் தூக்கிக்கொண்டான்.

இதை அவனது கோணத்திலிருந்து பார்த்து அவன் தன்னை ஒரு கதாநாயகன் ஆக்க எண்ணுகின்றான். புகழ்பெற விரும்புகின்றான் என்பதை நாம் உணர்ந்து கொண்டு அவனைத் தன்மையாகக் கூறலாம் ''தம்பி! நீ புகழ் பெறப் பலவழிகளும் உண்டு! இப்போது நீ இந்தக் கத்தியைக் கீழே போட்டுவிட்டு ஒரு கடப்பாறையை எடுத்துக்கொள். மற்றவர்கள் மீது அடிப்பதற்குப் பதிலாக பூமயை நன்கு தோண்டு. அதில் குழியை உருவாக்கு. அதில் செடிகளை நடு. அந்தச் செடிகள் மரமாக வளர்வதற்கு வாய்ப்புக்கொடு. அதனைப்பார்த்து நீ மகிழ்வடையலாம் என்று! அந்த வன்முறைத்தனத்தை நன்முறையாகத் திருப்பிவிட வாய்ப்புக்கிடைக்கும். இதன் மூலமாக நீ புகழ்பெறலாம். 100 மரங்களை உருவாக்கு. உன்னையும் படம் பிடிப்பார்கள். பத்திரிகையிலும் போடுவார்கள். உனது புகழும் வளரும்'' என்று கூறிப்பாருங்கள். கத்தியை எடுத்தால்தான் புகழ் கிடைக்கும் என்று நினைக்கும் அந்த இளைஞன் மரம் நடுவதால் புகழ் வரும். மற்றவர்களுக்கு சேவை செய்வதால் புகழ்வரும்.

நமது இந்த ஆற்றலை அதற்குப்பயன்படுத்தலாம் என்று நினைக்கவைக்கவேண்டும். இதுவே உள் நோக்கத்தை மாற்றும் முறை என்று அறிஞர்கள் கூறுகின்றனர். உள் மனதில் கிடக்கும் வன்முறைகளை நன்முறைகளாக மாற்றுவதற்கு முயன்றால் கெட்டகாரியங்கள் இல்லாது போய் விடும்.

ஒருவர் தனது மனைவியைப் பார்த்துக்கூறுகின்றார். ''புடைவையை எடுக்கும்போது புரட்டிப்புரட்டிப் பார்த்து வாங்குகின்றீர்கள். ஆனால் எங்களைக் கட்டிய பின் புரட்டி எடுக்கின்றீர்களே!'' என்றார். அதற்கு அவரது மனைவி கூறுகின்றார் இப்படி. ''உண்மை தான்! புடைவையை புரட்டிப்பார்க்கும்போது அது நல்லதா கெட்டதா என்று கண்டு பிடித்துவிடலாம். அதனால் புரட்டிப்பார்த்து எடுத்துக்கட்டுகின்றோம். ஆனால் உங்களைப்புரட்டிப் பார்த்து நல்லவரா கெட்டவரா என்று கண்டு பிடிக்க முடியவில்லை அதனால்தான் கட்டிய பின் புரட்டுகிறோம்'' என்றார்.

இளசை எஸ்.சுந்தரம்

# காணாமல் போனவர் தொடர்பில் ஆட்கொணர்வு மனுத்தாக்கல்

(கிளிநொச்சி)

வவுனியாவில் கடந்த 2000ஆம் ஆண்டு இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போன நபர் ஒருவர் தொடர்பாக ஆட்கொணர்வு மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வவுனியா, காட்டாறு சின்னப்புலத்தைச் சேர்ந்த அரியதாஸ் விஜயகுமார் என்பவரே விழுப்புரம் தொலைத்தொடர்பு நிலையம் ஒன்றில் வைத்து வெள்ளை வானில வந்த இராணுவததினரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

இதுவரை அவருக்கு என்ன நடந்தது என்பது பற்றி தெரியாத நிலையில் அவரின் தந்தை கொழும்பு மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

இம்மனுவில், பிரதிவாதிகளாக 211வது படைப்பிரிவின் பிரிகேடியர் மற்றும் இவரைக் கடத்திச் செல்வதற்கு உதவியதாகக் கூறப்படும் இரு படையினர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இதுபற்றிய விசாரணைகளை மேற்கொண்ட மேன் முறையீட்டு நீதிமன்ற நீதியரசர், மேற்கூறிப்பிட்ட 211வது படைப்பிரிவின் பிரிகேடியரை விசாரணை செய்து அது பற்றிய அறிக்கையினை வவுனியா நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு பொலிசாரைப் பணித்துள்ளார்.

இதேவேளை, மேற்படி கைது செய்யப்பட்ட நபரான விஜயகுமார் காயத்துடன் கொண்டு செல்லப்பட்டதை தான் நேரில் கண்டதாக சசிகுமார் என்ற நபர் சத்தியக்கடதாசி மூலம் நீதிமன்றில் உறுதி செய்துள்ளார். (உ-64,10)

# பொதுமக்கள் பங்களிப்பின்றேல் செயற்றிட்டங்களால் பலனில்லை

## தென்மாகாண திட்டப் பணிப்பாளர் லீலாசேன

(யாழ்ப்பாணம்)

மனிதனுடைய சமூக-பொருளாதாரப பிரச்சினைளுக்கு இலவசமான பொருட்களை அள்ளி வழங்குவதால் மட்டும் தீர்வு கண்டுவிட முடியாது. மனிதன் எதிர்நோக்கும் பிரச்சினைகளின் அடிவேரை நாம் பார்க்க வேண்டும். நோயின் குணங்குறிகளைத் தீர்த்துவிடுவதால் நோய் மாறிவிடும் என எண்ணுதல் கூடாது. அத்துடன் பணத்தினால் மட்டும் மனித பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாது .

இவ்வாறு தென் மாகாண கிராமிய பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின திட்டப் பணிப்பாளரான டபிள்யு. எம். லீலாசேன கடந்த சனியன்று யாழ். அரச செயலகத்தில் நடைபெற்ற ஆய்வுப்பட்டறையில் குறிப்பிட்டார்.

போரூட் நிறுவனமும், யாழ். மாவட்ட அரச செயலகமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்த ஆய் வுப்பட்டறையில் அரச அதிகாரிகள், சர்வதேச மற்றும் உளளூர் அரசசாரபற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் பங்கு பற்றியிருந்தனர்.

போரூட் நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் செல்வி எறின்றொடசெத் தலைமையில் இடம்பெற்ற இப்பட்டறையில் திட்டப்பணிப்பாளர் லீலாசேன தொடர்ந்தும் குறிப்பிடும் போது,

இன்றைய காலகட்டத்தில் பணத்தினால் மட்டும் எதையும் வென்று விடலாம், சாதித்து விடலாம் எனச் சிலர் கருதுகின்றனர். ஆனாலும் அதில் எத்தகைய உண்மையும இல்லை. மக்களின் வாழ்க்கை முறையிலும், சிந்தனாவோட்டத்திலும் பல மாற்றங்கள் ஏற்படவேண்டும். அதன் மூலம் தான் நாம் ஒரு நல்ல நிலைக்கு உயரலாம்.

இன்று சமூக விழிப்பூட்டல் திட்டம் பற்றி பலர் தமது வசதிகளுக்கேற்ப செயற்பட்டுவருகின்றனர். ஆனால் யாருமே உண்மையான சமூக வலுவூட்டல் பணியை முறைப்படி ஆராயவில்லை, செயற்படுத்தவில்லை.

உருவாக்கப்படும் செயற்றிட்டங்கள் மூலம் உரிய இலக்குகளை அடைய வேண்டுமாயின் அத்தகைய செயற்றிட்டங்களில் மக்கள் பங்களிப்பு அவசியம் இருக்கவேண்டும்.

இவை தவிர, அரச அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் மத்தியில் மனப்பாங்கு மாற்றமும் செய்யும் செயற்றிட்டங்கள் பற்றிய திடமான நம்பிக்கையும், ஆர்வமும் இருத்தல் வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

போரூட் நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் செல்வி எறின்றொட்செத் தனது தலைமையுரையில்,

யாழ்ப்பாணத்தில் வருமானமீட்டும் திட்டங்களை அமுல் செய்வது என்பது ஒரு சவால்மிக்க பணியாகும். ஆயினும், யுத்தத்தின் மூலம் பல்வேறு இழப் புக்களை எதிர் நோக்கிய மக்களுக்கு வருமானமீட்டும் திட்டமும் சமூக அணிதிரட்டலும் மிகவும் முக்கிய மானவைகளாகும் என்றார்.

உதவித்திட்டமிடல் அதிகாரி என். சிவபாத சுந்தரமும் இதில் உரையாற்றினார். (உ-16)

## இராசி பலன்

**30. 09. 2003**

**(புரட்டாதி 13, செவ்வாய்)**

**பஞ்சமி- மு.இ 12.58 வரை**

**விசாகம்-மு.ப. 6.41 வரை**

**அனுசம்- பி.இ 5.04**

**இராகுகாலம் - 3.02 - 4.32**

**சுபநேரம் - 10.32-12.02**

**மேடம்**

அஜீரணக் கோளாறு, எதிர்பாராத அச்சம், திடீர் நன்மை

**இடபம்**

நல்ல வரவேற்பு, தொழில் லாபம், காரிய அனுகூலம், திடீர் நன்மை

**மிதுனம்**

தேகாரோக்கியம், நினைத்த காரியம் நிறைவேறும் வாய்ப்பு, மனமகிழ்ச்சி, பிரயாண நன்மை

**கடகம்**

தொழில் விருத்தி, பிரயாண இடையூறு, பணத்தட்டுப்பாடு, முயற்சி தாமதம்

**சிங்கம்**

கற்பனை மிகுதி, ரோக நிலை, தன விரயம், முயற்சி தாமதம்

**கன்னி**

கூட்டு முயற்சி, நற்கீர்த்தி, போசன சுகம், பிரயாண நன்மை

**துலாம்**

மனோ சங்கடம், போசன சுகக் குறைவு, முயற்சி தாமதம்.

**விருச்சிகம்**

அன்பளிப்பு, விருந்துபசாரம், நல்ல சிந்தை, முயற்சி கைகூடும்

**தனுசு**

உணர்ச்சி வசப்படுதல், நிலை மாற்றம், சுப செலவு, சோம்பல் நிலை

**மகரம்**

நல்ல செய்தி, உற்சாகம், பிறருக்கு உதவுதல், தொழில் விருத்தி.

**கும்பம்**

எடுத்த காரியம் கைகூடும், பிறருக்கு உதவுதல், புதிய திட்டமிடல்

**மீனம்**

சரீரப் பிரயாசை, எதிர்பாராத செலவு, கட்டுப்படுதல், அமைதிக்குறைவு

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

# வெளிநாட்டு அமைப்புக்களின் செயற்றிட்டங்கள் மதிப்பீடு

(யாழ்ப்பாணம்)

பிரான்ஸ் நாட்டைச்சேர்ந்த பட்டினிக்கு எதிரான இயக்கத்தினாலும், இத்தாலி நாட்டைச் சேர்ந்த மூவிமெண்டோ நிறுனத்தினாலும் தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட செயற்றிட்டங்கள் பற்றிய பரீட்சார்த்தமான மதிப்பீட்டினைச் செய்வதற்கு அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் முடிவு செய்துள்ளது.

இதன் அடிப்படையில், மேற்படி நிறுவனங்களால் வழங்கப்பட்ட உதவிப் பொருட்கள் மூலம் அப்பகுதியில் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் அடைந்துள்ள வாழ்க்கை மாற்றம், முன்னேற்றம் பற்றி ஆராயப்படும் எனத் தெரிய வருகின்றது. (உ-16)

# இலட்சம் செலவில் தொழிற்பயிற்சி நிலையம்

(கந்தரோடை)

மானிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சிகளைப் பெற்றுக் கொடுக்கும் முகமாக, செயலக வளவினுள் தொழிற்பயிற்சி நிலையம் ஒன்று மிக விரைவில் அமைக்கப்படவுள்ளது.

இத் தொழிற்பயிற்சி மையத்தில் மின்னிணைப்பு, தச்சுத்தொழில் என்பன பயிற்றுவிக்கப்படவுள்ளன.

இக்கட்டடம் அமைப்பதற்கான 6 இலட்ச ரூபா நிதியினை இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை ஒதுக்கீடு செய்துள்ளதாக சண்டிலிப்பாய் உதவிப் பிரதேச செயலர் ச. செல்வராசா தெரிவித்துள்ளார். (உ-103)

# புலிகள் -முஸ்லிம் பிரதிநிதிகள் மட்டக்களப்பில் சந்திப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு இலுப்பையடிச் சேனையில் தமிழீழ விடுதலைப புலிகளுக்கும் முஸ்லிம் முக்கியஸ்தர்களுக்குமிடையே நேற்று முன் தினம் விசேட சந்திப்பொன்று இடம் பெற்றது.

நேற்று முன்தினம் காலை இடம் பெற்ற இச்சந்திப்பின்போது, செங்கலடி பதுளை வீதியில் விவசாயச் செய்கையில் ஈடுபடுவது தொடர்பாகவும் மற்றும் வர்த்தகம், மீள் குடியமர்வு, மீன் பிடித்தொழில் ஆகியவற்றை மேற்கொள்வது தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளது.

இலுப்பையடிச்சேனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பில், விடுதலைப்புலிகளின் மாவடி கோட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் ஜெயாவும், முஸ்லிம் தரப்பில் ஏறாவூர் சமாதானக் குழுத்தலைவர் எல்.எம்.காதர் மற்றும் முஸ்லிம் மீனவர்கள், விவசாயிகள், வர்த்தகர்கள் ஆகியோரும் பெருமளவு கலந்துகொண்டனர். (வ)

கோருவதாய்ப் பத்திரிகையாசிரியர் வெளியிடும் விண்ணப்பம்.

(இ) உமது அடையாள அட்டை பஸ்வண்டியிற் சென்ற போது தொலைந்து விட்டது.அதனைக் கண்டெடுத்தவர் உமது பகுதி கிராம அலுவலரிடம் ஒப்படைக்கின்றார்.நீர் அதைப்பெற்றுக் கொண்டு கண்டெடுத்தவரின் முகவரியையும் அறிகின்றீர் கண்டெடுத்தவருக்கு நன்றி தெரிவித்து நீர் எழுதும் கடிதம்.

(15 புள்ளி)

**3.கீழே தரப்பட்டுள்ள அ.ஆ.இ.ஈ என்னும் உரைப்பகுதிகள் ஒவ்வொன்றினதும் சுருக்கத்தை 15-20 சொற்களில் அமையுமாறு வேறு வேறாக எழுதுக.**

(அ) தமிழ் மொழியிலே உரைநடையும் உரைநடை இலக்கியமும் வளம் பெற்று விளங்கும் காலம் இருபதாம் நூற்றாண்டு எனக் கூறல் மிகையாகாது. தமிழ்நாட்டில் ஆங்கிலக் கல்வி விருத்தியடைந்ததன் பயனாகத் தமிழ் மொழி அடைந்த சிறப்புக்களுள் உரைநடை வளர்ச்சியை முக்கியமானதாகக் கூறலாம்.இந் நூற்றாண்டுக்கு முன்வழங்கி வந்த பல்வகைப்பட்ட நடைகளோடு இப்பொழுது வழங்கி வரும் உரைநடையினை ஒப்பு நோக்கிப் பார்க்குமிடத்திலே தான் இக்காலத்தில் உரைநடை மிக விரைவாக வளர்ச்சி பெற்று வருதலை நாம் தெளிவாகக் காணலாம்.

(ஆ) ஒரு காவியத்தையோ கதையையோ படிக்கும் போது, யாரோ ஒருவர் அதனை நமக்கு எடுத்துச் சொல்வது போல் உணர்கிறோம்.காவியத்திலும் கதையிலும் வரும் பாத்திரங்கள் சொல்வனவற்றை மட்டும் அல்லாமல் அக் கதா பாத்திரங்களுக்குப் பின்னே இருந்தவாறு அவர்களின் வாயிலாக ஒருவர் பேசுவதையும் உணர்கிறோம். அவ்வாறு பேசும் குரல் நூலாசிரியரின் குரலானால் அந்தக் குரலின் சிறப்பியல்பு தான் அவருடைய நடை என்று கூறப்படும்.

(இ)முத்துக் குளிக்குங் கடலிலே ஒருவகைப் பெரிய மீன்கள் முத்துக் குளிப்போரைக் கொன்று தொலைக்கின்றன. இதனால் மந்திரவாதியர் கொடிய மீன்களை வசியம் பண்ணி முத்துக்குளிப்போருக்குக் கேடு நேராதவாறு பாதுகாப்புச் செய்வர். மீன்களை மட்டுமன்றிப் பறவைகள்,விலங்குகள் ஆகியவற்றையும் அவர்கள் மந்திரத்தால் கட்டிவிட வல்லவர்கள். அரசனின் அனுமதி இல்லாமல் எவரும் முத்துக்குளித்தல் இயலாது.முத்து வணிகர் தாம் எடுக்கும் முத்துக்களிற் பத்தில் ஒரு பங்கை அரசனுக்கு வரியாகச் செலுத்துவர். சிறந்த முத்துக்களை அரசன் நல்ல விலை கொடுத்து வாங்குவான்.

(ஈ)உன் நண்பர்களைத் தேர்ந்தெடுத்தலில் நீ விழிப்புடையவனாயிருத்தல் அவசியமாகும். ஏனெனில் உன்னைப்போன்ற சூதுவாதற்ற இளைஞர்களுள் தீயோரின் கூட்டுறவால் கெட்டொழிந்தோர் இவ்வுலகத்தில் பலருளர்.நான் நண்பன்,நான் நண்பன் என்று கூறிக்கொண்டு அவர்களை அண்டும் ஒவ் வொரு நயவஞ்சகனையும் அவர்கள் தூய நண்பன் என்று மனமார நம்பி நடந்து கொள்வதே அதற்குக் காரணமாகும். இக்குழியில் நீ விழாதிருக்க வேண்டுமானால் நண்பர்களென்று உன்னை நாடி வருகிறவர்களிடம் நீ எச்சரிக்கையாகப் பழகிக் கொள்ள வேண்டும். உன்னைக் கண்டவுடனே தாம் நண்பராய் விட்டதாக யாராவது எதனையும் பசப்பிவிட்டால் அதை நம்பி விடாதே.ஏனெனில் உண்மையான நட்பு என்றும் திடுமென உண்டாவதன்று.

**3.பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடைதருக.**

பிடித்து வைத்த பிள்ளையாராக இருக்காமல் பாரதியாரின் கவிதைகள் நமது மனத்துள்ளே அசைவைத் தருகின்றன.ஆசையைத் தருகின்றன. அனுபவத்தை வெறுக்கச் செய்து நித்தியமான இன்பத்தில் நாட்டமிட வைக்கின்றன.காதல் இன்பத்தில் இரகசியங்களைச் சொல்லும் நாவாலே கடவுள் இன்பத்தின் இரகசியங்களைப் பாரதி பாடல்கள் வியக்கின்றன.உயரிய சிந்தனைகளை உள்ளபடி சொல்லுவது மட்டுமல்லாமல், உணர்ச்சியடையும் படியாக மட்டும் சொல்லாமல் மனிதகுலம் உய்யும் படியாகவும் சொன்னான் பாரதி. எத்தனை எத்தனை பாடல்களை மேற்கோள் காட்டலாம். அரிய பொருள்களை, உரியபொருள்களை உரிய முறையிற் சொல்லிப் போனான் நாம் மனத்தாற் பின்பற்றுவதற்காக, எழுத்தாலும், எண்ணத்தாலும் எழுச்சி பெறுவதற்காக அவ் வாறு சொன்னான்.

(அ) மனத்துள்ளே அசைவைத் தருதல் என்றால் என்ன?
(ஆ) உரையாசிரியர் பாரதி பாடலிற் காணும் நான்கு சிறப்பம்சங்கள் எவை?
(இ) பாரதி பாடல்கள் வியக்கும் இருபொருள்கள் எவை?
(ஈ) அற்பத்தை வெறுத்தல் என்றால் என்ன?
(உ) பாரதி சொல்லிப்போன விடயங்கள் எவை?

(15 புள்ளிகள்)

# கல்விப்பொதுத் தராதரப்பத்திர (சா-த)
# மாதிரிப் பரீட்சை – 2003
## பாடம :-தமிழ் மொழியும் இலக்கியமும்-III

**1,2,3,4 ஆகிய வினாக்களுக்கும், 5,6,7 ஆகிய வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவுக்கும் விடை தருக.**

1.பின்வரும் கூற்றுக்கள் ஒவ்வொன்றின் கீழும் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

(அ)‘‘....... குழப்பமான நம் வழக்கை ஆராய்ந்து இந்தச் சிறுவனா தீர்ப்பு வழங்கப்போகிறான்.
(I) இக் கூற்று யாரால் கூறப்பட்டது?
(II) யாருக்குக் கூறப்பட்டது?
(III)எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?
(IV) இங்கு குறிப்பிடப்படும் வழக்கு எது தொடர்பானது?

(ஆ) ‘‘இப்பாத்திரம் ஆபுத்திரனிடம் இருந்து இங்கு வந்தது.இது கொண்டு உலகத்தின் பசியைப் போக்கும் தருமத்தை நீ செய்ய வேண்டும்’’
(I) யாரால் கூறப்பட்டது?
(II) யாருக்குக் கூறப்பட்டது?
(III) எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?
(IV) இங்கு குறிப்பிடப்படும் பாத்திரம் எது?

(இ) ஆண்டகை யவனைக் கொன்றே னெறிதர வென்னு நின் சொனிலை யன்று புதுமையாமே.
(I) யாரால் கூறப்பட்டது?
(II) யாருக்குக் கூறப்பட்டது?
(III) எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?
(IV) நபி எவ்வாறு கடிந்துரைக்கிறார்?

(ஈ)‘‘பொருகுமித் துயருனக் குற்ற பெற்றியென் கிருகலின் சிந்தையாய் செப்பு கென்றனன்’’
(I) யாரால் கூறப்பட்டது?
(II) யாருக்குக் கூறப்பட்டது?
(III)எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?
(IV)ஆத்தும விசாரி எதனைத் தேடி அலைந்தான்?

(உ) ‘‘ பொன் அனையாய்! விடு! யான் புலையன் என்னில் புலையனும் அல்லேன் புலையற்கு அடிமை கண்டாய்’’
(I) யாரால் கூறப்பட்டது?
(II) யாருக்குக் கூறப்பட்டது?
(III)எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?
(IV)யாருக்கு அடிமை எனக் கூறப்பட்டது? (20புள்ளி)

2.பின்வரும் செய்யுள்களின் பொருளினை இக்கால உரைநடையில் எழுதி அவை ஒவ்வொன்றிலும் அடிக்கோடிட்ட தொடர்களின் சிறப்புக்களை விளக்கி எழுதுக?

(அ) மாலயற் கரிய நாதன வடிவொரு சோதி யாகச்
சாலவே மயங்கு வார்க்குச் சங்கரன் தான்ம கிழ்ந்தே
ஏலவார் குழலாள் தன்னோ டிடபவா கனனாய்த் தோன்றிச்
சீலமார் பூசை செய்த திருத் தொண்டர் தம்மை நோக்கி

(ஆ) சொற்ற வார்த்தையைக் கேட்டலும் தொல்லுயிர்
முற்றும் உண்பது போலும் முனிவினான்
பற்று மின் கடிதின் நெடும் பார்மினது
ஏற்று மின என நால்வரை ஏவினான்

(இ) கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள் - சபை நடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டாதவன் நன் மரம்

(ஈ) சாகவும் மனமில்லைத் தண்டனைக்கு எதிர்
போகவும் துணிவில்லைப் புறத்து ளாரைப் போல
ஏகவும் புகலிலை ஈடு செய்வோர்
பாகமும் பலமிலைப் பகைக் கின்றேனென்றான்

(உ) பாவியேன் மகனே என்பாள்; பதைப்பள் மேன் முகத்தில் மோதித்
தாவியே விழுவன்; நின்று தயங்கியே மயங்கி வீழ்வள்
காவியங் கண்ணீர் பாயக் கதறுவள்; பதறி ஏங்கி
ஆவியைத் தேடித் தேடி அலமரும்உடலம் ஒத்தாள்

(20 புள்ளி)

3.பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினை விளக்குக?
(அ) இளையான் குடிமாற நாயனாருடைய மனைவியாரின் விருந்தோம்பற் பண்பு.
(ஆ)மூதுரையில் நல்லார் பற்றி ஔவையார் கூறியவை?
(இ) கவிச்சக்கரவர்த்தி கம்பன் இலக்குவனுடைய சீற்றத்தை உவமை மூலம் எவ்வாறு காட்டுகிறான்.

4.பின்வருவனவற்றிற்கு விடை தருக?
(அ) ‘‘கண்ணுவ முனிவர் சகுந்தலை மீது வைத்திருந்த பாசம் அளவிடற் கரியது’’ விரித்துரைக்க.
(ஆ)திருமணிமாலையின் ஆசிரியரால் போருக்கெழுந்த நமுறூதின் படைகளின் வருணனை எவ்வாறு காட்டப்பட்டுள்ளது என்பதை விளக்குக?

5.‘‘கணையாழி’’ என்னும் பாடப்பரப்பை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றிற்கு விடை தருக?
(அ) துருவாச முனிவர் சகுந்தலைக்கு இட்ட சாபம் யாது? சாபமிடுவதற்குரிய காரணம் யாது?
(ஆ)சகுந்தலை கணையாழியைக் காணாது துடித்தபோது துஷ்யந்தன் கூறியவார்த்தை யாது? அதற்கு அவள் கூறிய பதில்-யாது?
(இ) துஷ்யந்தன் கணையாழியைக் கண்டவுடன் பட்ட வேதனையும் அரற்றிய வார்த்தைகளும்?

6.வள்ளுவரும் பாரதியாரும் என்னும் கட்டுரையை ஆதாரமாகக் கொண்டு பின்வருவன தொடர்பாக வள்ளுவர் கூறிய கருத்துக்களை பாரதியார் அடியொற்றிச் சொல்லுமாற்றை விளக்குக.
(அ) பொருளிலார்
(ஆ)அறம்
(இ) சினம்

(15 புள்ளி)

7.‘‘பழையதும் புதியதும்’’ என்னும் பாடப்பரப்பை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
(அ)மோட்டார் கார்களைக் காணும்போது அதை விரும்பும் மக்களை எண்ணி என் உடம்பெல்லாம் பற்றி எரிகிறது எனக் கார்த்திகேசு சொல்வதற்குரிய காரணம் யாது?
(ஆ)கார்த்திகேசு மண்வெட்டியை கையில் எடுத்ததற்குரிய காரணம் யாது?
(இ) பழையதும் புதியதும் ஞாபகப்படுத்துவது எதனை எனத் தருக?

(15 புள்ளி)

**கடந்த 23.09.2003 ல் வலம்புரியில் வெளியான கல்விப்பொதுத் தராதரப் பத்திர(சா/த) தமிழ்மொழியும் இலக்கியமும்**

**பகுதி -Iஇன் விடைகள்**

01) 2
02) 4
03) 1
04) 3
05) 3
06) 2
07) 1
08) 2
09) 3
10) 2
11) 3
12) 4
13) 1
14) 3
15) 4
16) 1
17) 2
18) 1
19) 3
20) 4
21) 3
22) 2
23) 4
24) 4
25) 1
26) 2
27) 3
28) 3
29) 1
30) 3
31) 2
32) 4
33) 4
34) 3
35) 1
36) 2
37) 3
38) 1
39) 3
40) 2

# கல்விப்பொதுத் தராதரப்பத்திர (சா-த)

## மாதிரிப் பரீட்சை - 2003

**பாடம் :-தமிழ் மொழியும் இலக்கியமும்-I நேரம் :-45 நிமிடம்**

ஆக்கம்:- திருமதி சி. தவராசா (ஆசிரியர்)

(மல்லாகம் மகாவித்தியாலயம்)

**மிகவும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க**

1)''சாளரந் தோறும்''நல்ல சந்திரன் உதயங் கண்டார்'' சாளரம் என்பதன் ஒத்த கருத்துச் சொல்.
1.மேல்மாடி 2.வாயில் 3.யன்னல் 4.நிலாமுற்றம்

2)வழிநடந்த களைப்பாற் சிறிது நேரம் அம்பலத்திற் காலாறினார்.காலாறுதல் என்றால்.
1.உணவு உண்ணல் 2.நித்திரை செய்தல்
3.அளவளாவல் 4.இளைப்பாறல்

3)திறந்த வெளியரங்குத் திறப்பு விழா குறித்த நேரத்திற் கால்கோளாயிற்று. கால்கோள் என்றால்.
1.அத்திவாரம் 2.ஆரம்பம் 3.கடல்கோள் 4.கருதுகோள்

4)சந்திரன் சுவர்க்கியின் வண்மையைப் புகழேந்திப் புலவர் பல விடங்களிற் போற்றியுள்ளார்.வண்மை என்பதன் எதிர்க்கருத்துச் சொல்.
1.கொடை 2.வலிமை 3.நொய்ம்மை 4.உலோபம்

5)அபிமன்யுவின் பேராண்மையால் மன்னர் பலர் புறங்காட்டினர். புறங்காட் டல் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்.
1.எதிருன்றல் 2.தோற்றல்
3.சரணடைதல் 4.நெஞ்சுகாட்டல்

**பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் புள்ளிக்கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப்பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.**

6)ஏன்..........நிற்கிறாய்; உள்ளே வா.
1.தாவாரத்தில் 2.தாள்வாரத்தில்
3.தாவறாத்தில் 4.தாழ்வாரத்தில்

7)தொழிற்சங்கம் தனது கோரிக்கையை நிறைவேற்ற ஒரு மாத...... விதித்தது.
1.உச்சவரம்பு 2.உத்தரவாதம் 3.காலக்கெடு 4.விதிவிலக்கு

8)கடவுள் உண்டென்ற கொள்கையை உடையவன்.......ஆவான்.
1.நைட்டிகன் 2.விஞ்ஞானி 3.நாஸ்திகன் 4.ஆத்திகன்

9)ஆணையாளரின்......மீறிய பணியாளன் தண்டிக்கப்பட்டான்.
1.விதப்புரையை 2.பணிப்புரையை
3.நெறியுரையை 4.அறிவுரையை

10)அரசியல் தலைவர்களின்......பேச்சுக்கள் எந்தப் பிரச்சினையையும் தீர்க்கா.
1.ஆக்கபூர்வமான 2.வகுப்புவாதமான
3.சொல்லலங்காரமான 4.தான்தோன்றித்தனமான

**பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

11)விலங்குகள் இயற்கையான சூழ்நிலையில் சுதந்திரமாக வாழும் பாதுகாப்பான இடம்.
1.விலங்ககம் 2.காட்டரண் 3.ஆரணியம் 4.புகலரண்

12)உலகத்துச் சான்றோர் வாழ்ந்த முறையறிந்து ஒழுகுதல்.
1.சான்றாண்மை 2.பட்டறிவு 3.ஒப்புரவு 4.ஆசாரம்

13)உள்ளத்திலே நிகழ்ந்து பிறர்க்கு இத்தன்மையானதென்று கூறமுடியாத இன்ப ஒழுக்கம்.
1.அகத்திணை 2.அ.்.றிணை 3.புறத்திணை 4.உயர்திணை

14)ஒருவராலும் படைக்கப்படாது தானே தோன்றியது.
1.கையூட்டு 2.சுருங்கை 3.கண்டம் 4.சுயம்பு

15)பலா,தோடை என்பவற்றின் உள்ளீடு.
1.சுளை 2.தசை 3.சுதை 4.சாறு

**பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

16)நகைச்சுவைக் கதைகளைக் குழந்தைகள் செவிமடுத்தன. செவிமடுத்தல் என்னும் மரபுத் தொடரின் பொருள்.
1.வெறுப்புடன் கேட்டல் 2.விரும்பிக்கேட்டல்
3.செவிப்படுதல் 4.சுவைத்தல்

17)அவன் எக்காரியத்தையும் நிதானமாகச் செய்யமுடியாத அவசரக் குடுக்கை.அவசரக் குடுக்கை என்றால்.
1.பயனற்றவன் 2.குறும்புக்காரன்
3.திறனற்றவன் 4.பதற்றக்காரன்

18)நுனிப்புல் மேய்தலால் நிரப்பிய அறிவைப் பெறமுடியாது.நுனிப்புல் மேய்தல் என்றால்.
1.ஒன்றும் விடாது படித்தல் 2.மனப்பாடஞ் செய்தல்
3.மேலெழுந்தவாரியாகப் படித்தல் 4.அக்கறையின்றிப்படித்தல்

19)பெரியவர்கள் எவ்வித துன்பம் நேரிடினும் தமது நிலையில் நின்றும் மாறுபடார் என்னும் கருத்தைத் தரும் பழமொழி.
1.உலக்கை தேய்ந்து உளிப்பிடியாயிற்று
2.தேய்ந்தாலும் சந்தனக்கட்டை தன் மணம் மாறாது
3.எடுக்கிறது பிச்சை ஏறுவது பல்லக்கு
4.ஆற்றிலே போட்டாலும் அளந்து போடவேண்டும்

20)மழை விட்டுந் தூவானம் மாறவில்லை என்னும் பழமொழியின் பொருள்.
1.எந்தச் செயலுக்கும் ஏதோவொரு விளைவு உண்டு
2.மழையோடு தூவானம் நின்று விடுவதில்லை
3.போரோ கலகமோ முடிந்தாலும் அதன் தாக்கம் இருக்கவே செய்யும்
4.மழை பெய்யாவிட்டால் தூவானத்தால் வரும் துன்பமும் இல்லை

**பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.**

21)குளத்தில் நீரெல்லாம் வற்றியது இவ்வாக்கியம்.
1.திணைவழுவமைதி 2.இடவழுவமைதி
3.பாலவழுவமைதி 4.எண்வழுவமைதி

22)பெயர்ச்சொல்லை மாத்திரம் கொண்டு முடியும் வேற்றுமை.
1. 2ம் வேற்றுமை 2.3ம் வேற்றுமை
3.5ம் வேற்றுமை 4.6ம் வேற்றுமை

23)துறவிக்கு வேந்தன் துரும்பு. இவ்வாக்கியம்.
1.பெயர்ப் பயனிலை கொண்டது 2.வினைப் பயனிலை கொண்டது
3.பயனிலை மறைந்து வந்தது 4.எழுவாய் மறைந்து வந்தது

24)ஆலயம் தொழுவது சாலவும் நன்று.இங்கு வந்துள்ள உரிச்சொல்.
1.ஆலயம் 2.நன்று 3.சால 4.தொழுவது

25)'திங்கள்' முடிசூடும் மலை எங்கள் மலை இங்கு வந்துள்ள அணி.
1.உவமை அணி 2.தற்குறிப்பேற்ற அணி
3.உயர்வு நவிற்சி அணி 4.உருவக அணி

26)நடுவான் என்பதில் இடம்பெற்றுள்ள எதிர்கால இடைநிலை.
1.டு 2.வ் 3.வா 4.ஆன்

27)மலங்கழிக்கப் போதலை வெளிக்குப் போகிறேன் எனக் கூறுதல்.
1.மரூஉ 2.மங்கலம்
3.இடக்கரடக்கல் 4.குழூஉக்குறி

28)பெயராயும் வினையாயும் உரியாயும் வரத்தக்க ஒரு சொல்.
1.அணி 2.கணி 3.பணி 4.துணி

29)பன்மை விகுதிபெற்று வழங்கக் கூடிய ஒரு பெயர்.
1.தண்ணீர் 2.குணம் 3.கோபம் 4.குளிர்

30)பின்வருவனவற்றுள் காலங்காட்டும் தொழிற் பெயராயும் தெரிநிலை வினைமுற்றாயும் வரத்தக்க சொல்.
1.பாய்ந்தான் 2.பாய்ந்தனர் 3.பாய்ந்தன 4.பாய்ந்தது

**பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றினதும் முற்பகுதிக்கு மிகப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவுசெய்க.**

31)நீயும் நானும் அவனும்
1.சுற்றுலாவிற் சென்றாய் 2.சுற்றுலாவிற் சென்றேன்
3.சுற்றுலாவிற் சென்றோம் 4.சுற்றுலாவிற் சென்றான்

32)ஆசிரியர் எங்கள் வீட்டிற்கு வரும்போது.
1.நாங்கள் ஏதோ படித்துக் கொண்டிருக்கிறோம்
2.நாங்கள் ஏதோ படித்துக் கொண்டிருப்போம்
3.நாங்கள் ஏதோ படித்துக் கொள்வோம்
4.நாங்கள் ஏதோ படித்துக் கொண்டிருந்தோம்

33)கண்ணன் கோயிலுக்குச் சென்றிருந்ததால் அந்த வியத்தகு காட்சியைக்
1.கண்டான் 2.கண்டிருந்தான்
3.காண்பான் 4.கண்டுகொண்டிருப்பான்

34)பெற்றார் எப்படி இருப்பரோ பிள்ளைகளும்
1.இவ்வண்ணமே இருப்பர் 2.அங்ஙனமே இருப்பர்
3.இப்படியே இருப்பர் 4.இவ்விதமே இருப்பர்

35)கற்றாரோ கரிய மனிதனோ அங்கே.
1.தோன்றுவது 2.தோன்றுவன
3.தோன்றுபவன் 4.தோன்றும் உருவம்

**பின்வரும் பாடலைப் படித்து அதன் கீழே தரப்பட்டுள்ள வினாக்க ளுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

வானம் சிவக்கவே வாரிய லைசிவக்கத்
தானு மலைந் தலைந்து தாள் சிவக்க ஞானவுணர்
வின்றி மதுவருந்து மீனவரைப் போற் கணசிவக்கக்
குன்றிற் சரிந்தான் பொற் கோ.

36)இச்செய்யுளில் கவிஞர் கூறவந்த பிரதான பொருள்.
1.சந்திரோதயம் 2.மதுவருந்து மீனவர்
3.சூரியாத்தமனம் 4.வானத்தின் சிவப்பு

37)தாம் கருதிய பொருளை வெளிப்படுத்துவதற்குக் கவிஞர் கையாளும் முறை.
1.சம்பவ வருணனை 2.பாத்திர வருணனை
3.உருவக வருணனை 4.கதை வருணனை

38.இச்செய்யுளில் உவமை காணப்படும் இடம்.
1.செய்யுளின் முதலாம் அடி 2.செய்யுளின் மூன்றாம் அடி
3.செய்யுளின் இரண்டாம் அடி 4.செய்யுளின் நான்காம் அடி

39.இச்செய்யுளில் இடம் பெற்றுள்ள முற்றுப் பயனிலை.
1.அலைந்து 2.பொற்கோ 3.சிவக்க 4.சரிந்தான்

**கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக் கோப்பான பந்தி ஒன்று அமையும். அவ்வாறு பந்தியை அமைப்பதற்கு மிகப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவுசெய்க.**

40.
(அ) இதன் பயனாக ஆங்கிலங்கற்ற தமிழறிஞர்கள் பல்வேறு வழிகளில் தமிழ்ப்பணி செய்யமுற்பட்டனர்.
(ஆ) சிலர் பழைய இலக்கிய நூல்களைத் தேடி அச்சிற் பதிப்பித்தனர்.
(இ) வசன நூல்கள் விஞ்ஞான சாத்திர நூல்களை அவ்வத் துறையிலே தகுதியுடையோர் இயற்றிவந்தனர்.
(ஈ) சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆங்கிலக்கல்வி தமிழ் நாட்டிற் பரவத்தொடங்கியது.
1.ஈ,அ,இ,ஆ 2.ஈ,ஆ,இ,அ 3.ஈ,ஆ,அ,இ 4.ஆ,அ,இ,ஈ

# கல்விப்பொதுத் தராதரப்பத்திர (சா-த)

## மாதிரிப் பரீட்சை - 2003

**பாடம:-தமிழ் மொழியும் இலக்கியமும்-II நேரம்:-3மணி**

**1.பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 250 சொற்களுள் அமையுமாறு எழுதுக.**

(அ) சனநடமாட்டமும் வாகன நெரிசலும் கட்டடங்களும் பரபரப்பும் ஆரவாரமும் நிறைந்த நகரம் பற்றிய வருணனை.
(ஆ) ''இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை'' என்பதை விளக்கும் கற்பனைக்கதை.
(இ)மின்னாற்றலின் வியத்தகு விளைவுகள் பற்றிய ஒரு உரையாடல்.
(ஈ) நீர் அண்மையிற் பார்த்து இரசித்த தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றின் குறை நிறைகளைக் காரணம் காட்டி விமர்சனம் செய்க.

(30 புள்ளி)

**2.பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து 100 சொற்களில் அமையுமாறு எழுதுக.**

(அ) எயிட்ஸ் நோய் பரவி வருகின்றது. இதனைத் தடுக்க மக்கள் தம்மால் இயன்றளவு பொருத்தமான தற்காப்பு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி ஒரு துண்டுப் பிரசுரம்.
(ஆ) சிறுநீரக மாற்றுச் சிகிச்சைக்காக ஒருவர் பொது மக்களிடம் நிதி யுதவி

# இருவேறு கடற்படைகள் என்ற விடயத்தில் தீர்க்கமான ஒரு முடிவுக்கு வரவேண்டும்

## இவ்வாறு ஜனாதிபதியைக் கோரியுள்ளாராம் தமிழக முதல்வர்

(கொழும்பு)

தமிழ்நாட்டில் சுமார் 65 மில்லியன் மக்கள் வாழ்ந்து வரும் நிலையிலும் அங்கு தனியான கடற்படை எதுவும் இல்லை. ஆயினும் 17 மில்லியன் மக்கள் வாழும் இலங்கையில் மாத்திரம் இரண்டு வேறுவேறான கடற்படைகள் உள்ளன. இது விடயம் குறித்து இலங்கை அரசாங்கம் ஒரு தீர்க்கமான முடிவுக்கு வரவேண்டும்.

இவ்வாறு இலங்கை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்காவிடம் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

கடந்த சனியன்று எம்பிலிபிட்டிய சென்சூரியா உல்லாச விடுதியில் இடம்பெற்ற மாகாண முதலமைச்சர்கள், அமைச்சர்கள், மாகாணசபைத தலைவர்கள் மற்றும் உபதலைவர்கள் ஆகியோருக்கான ஒருநாள் கருத்தரங்கில் விசேட அதிதியாக கலந்து கொண்ட ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பாலபட்ட பெந்தி உரையாற்றும் போதே மேற்கொண்ட தகவலைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில், இலங்கையில் தனித்தனியாக இருவேறான கடற்படைகள் உள்ளன. அவற்றில் ஒன்று இலங்கை அரசாங்கத்திற்குச் சொந்தமான இலங்கைக் கடற்படை மற்றையது விடுதலைப்புலிகளுக்குச் சொந்தமான புலிகளின் கடற்படை. இவ் இரண்டின் தலைமைப் பீடங்களும்வேறு வேறானவையாக உள்ளன.

இந்த நிலையில், இலங்கைக் கடற்படைக்குச் சொந்தமான கடற்பிராந்தியத்தினைப் பயன்படுத்துவதற்கு புலிகளுக்கு இலங்கை அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளதா? என்று ஜனாதிபதியிடம் வினாவியுள்ள ஜெயலலிதா, எவ்வாறாயினும் இந்தியக் கடற்பிராந்திய எல்லைக்குள் விடுதலைப்புலிகள் நடமாடுவதற்கு எக்காரணம் கொண்டும் அனுமதி வழங்கப்படமாட்டாது எனவும் உறுதிப்பட ஜனாதிபதியிடம் குறிப்பிட்டிருப்பதாக பாலபட்ட பெநதி கூறினார். (உ-18)

# அபிவிருத்தி நல்லிணக்க சமாதானத்தை கட்டியெழுப்பல்

## இருநாள் மக்கள் அரங்கு

(யாழ்ப்பாணம்)

மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் ''அபிவிருத்தி நல்லிணக்கம் மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்புதல்'' எனும் தலைப்பில் இருநாள் மக்கள் அரங்கு திருமதி. சறோஜா சிவச்சந்திரன் தலைமையில் இன்றும் நாளையும் காலை8.30 மணிமுதல் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

சமாதானச் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் எமது பிரதேசம் எதிர்நோக்கும் சவால்கள் மற்றும் தற்போதைய அரசியல் நிலைவரங்கள், அபிவிருத்திப் பணிகள், நல்லிணக்கம் போன்ற விடயங்கள் குறித்து மக்களுக்கு விளக்கமளிக்கும் முகமாகவே மேற்படி மக்கள் அரங்கு நடாத்தப்படவுள்ளது.

இந்நிகழ்வில்,பிரதித்திட்டப் பணிப்பாளர் ந.சிவபாதசுந்தரம் கொழும்பு பசுமை நிறுவனத்தைச் சேர்ந்த க.விஸ்வலிங்கம் மற்றும் தேசிய கல்வி நிறுவக விரிவுரையாளர் திருமதி தனலஷ்மி வில்வநாதன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

இதில் கலந்து கொள்வதற்காக யாழ்ப்பாணம்,புத்தளம்,மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களில் இருந்து மகளிர் குழுக்களின் பிரதிநிதிகள் பலர்வருகை தரவுள்ளனர். (உ-18)

# சம்பள உயர்வு கோரி

## அரசாங்க பொது ஊழியர் சங்கம் பிரதமர் ரணிலுக்கு மகஜர்


(கொழும்பு)


அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கம், சம்பள உயர்வு கோரி பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுக்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

அம்மகஜரில் விலைவாசி ஏற்றம், போக்கு வரத்துச்செலவு அதிகரிப்பு போன்ற காரணங்களினால் அரசாங்க ஊழியர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு-கிழக்கு மாகாண சபையின் கீழ் கடமையாற்றும அலுவலகப் பணியாளர் சேவையைச் சேர்ந்த ஊழியர்களுக்கு கடந்த 2002,2003ஆம் ஆண்டுக்கான பதவி உயர்வுகள் வகுப்புII,I வழங்கப்படாமல் இருப்பதனால் அவர்களுக்கு நேர்முகப்பரீட்சைகளை நடத்தி பதவி உயர்வுகள் வழங்கப்படவேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இம்மகஜர் பொது நிர்வாக அமைச்சர், வடக்கு-கிழக்கு மாகாண பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (தி)





வடமராட்சிக் கோட்டத்தில் அல்வாய் முத்துமாரி அம்மன் ஆலய முன்றலில் நடைபெற்ற தியாக தீபம் திலீபனின் 16வது ஆண்டு நினைவு தின நிகழ்வுகளின் போது யாழ்.மாவட்ட அரசியல் துறை மகளிர் பொறுப்பாளர் கலைவிழி உரையாற்றுவதையும் நிகழ்விலே திரண்ட மக்களில் ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம். (படங்கள் :பரு.நிருபர்)

### புலமைப் பரிசில் பரீட்சை இலவசக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

மேல் மாகாண ஆசிரிய ஆலோசகர் த.அம்பிகைபாகன் யாழ். வலயக் கல்வி அலுவலகத்தின் அனுசரணையுடன் நடாத்திவரும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான இலவசக் கருத்தரங்கு இன்று காலை 9.00 மணிக்கு யாழ். இந்துமகளிர்ஆரம்பப் பாடசாலையில இடம்பெறவுள்ளது.

அடுத்து, வரும் தினங்களில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தாக் கல்லூரி ஆகியவற்றில் இந்த இலவசக்கருத்தரங்கு இடம்பெறவுள்ளது. (உ)

### ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணிக்கு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில், ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜெ.எக்ஸ். செல்வநாயகம் தலைமையில் இடம் பெறவுள்ளது. (உ-75)

### தெங்குச் செய்கையாளர் மாநாடு

(யாழ்ப்பாணம்)

வட-மாகாண தெங்குச் செய்கையாளர் சங்கத்தின் வருடாந்த மாநாடு நாளை புதன்கிழமை மு.ப.10.00 மணிக்கு அ.நல்லதம்பி தலைமையில் தென்மராட்சி கிழக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிலைய மேல்மாடி மண்டபத்தில் நடைபெறவுளளது.

இந் நிகழ்வில்,பிரதம விருந்தினர்களாக பெருந்தோட்ட அமைச்சின் செயலாளர் கே.ஏ.எஸ்.குணசேகர மற்றும் கொழும்பு தென்னைப் பயிர்ச்செய்கைச் சபைத் தலைவர் லிங்கன் பெர்னாண்டோ ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-18)

### வீரர்களுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

விருதுகள் நாள் சஞ்சிகைக்காக யாழ். பல்கலைக்கழகத்திலுள்ள அனைத்து விளையாட்டு அணிகளினதும் புகைப்படங்கள் இன்று பி.ப. 3. 30.மணியளவில் பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் எடுக்கபபடவுள்ளதால், அனைத்து அணியைச் சேர்ந்த வீர, வீராங்கனைகளையும் தவறாது சமுகம் தருமாறு விளையாட்டு அவையின் செயலாளர் கேட்டுள்ளார். (உ)

# நவராத்திரி பாமாலை

## ஐந்தாம் நாள்



### வேதனைகள் தீர

செல்வத்தால் அருளாட்சி செய்கின்ற லக்குமியே
ஏழைகளைக் கைதூக்கி விட்டிடம்மா
வெல்லத் தமி ழால் போற்றிப் பாடுகிறோம் - எம்
வேதனைகள் தீர்த்திட வந்திடம்மா

செ.கிசோத்தமன்
*யாழ்/மத்திய கல்லூரி*

### சிரிப்ப தென்ன இலக்குமியே

செங்கமலத்தில் இருக்கும் இலக்குமியே
செவ்வாயால் சிரிப்பதென்ன இலக்குமியே
எங்களுக்கு அருள் புரிவாய் இலக்குமியே
என்றுமே வாழவைக்கும் இலக்குமியே

நாகேந்திரம் திவ்வியா
*யா/யூனியன் கல்லூரி*

### உயர்த்தும் இலக்குமி

வீடு நிறையவும்
நாடு நிறையவும்
வீர இலக்குமி
வருக வருகவே!

ஓடும் மாந்தரை
நிறுத்தி வைத்துமே
உயர்த்தும் இலக்குமி
வருக வருகவே!

க.விசாளினி
*யா/வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை*

### தினமிங்கு தொழுகின்றோம்

சொல்ல முடியாத சோகத்தால்
சோர்ந்து விழுவோர் ஓர் பக்கம்
வல்லமை யுள்ளோர் ஓர் பக்கம்
வாயே பேசாதோர் ஓர் பக்கம்

எல்லாம் நமக்கென வாழ்வோரும்
ஏனிங்கு வேண்டும் லக்குமியே
எல்லாரும் எல்லாமும் பெறவேண்டும்
என்றுன்னை தினமிங்கு தொழுகின்றோம

இ.கங்கா
*யூனியன் கல்லூரி*

### பெண்ணின் நல்லாள்

மண்ணில் நல்ல வண்ணம் நாம் வாழ
எண்ணிலா நிறைசெல்வம் அருளும் தாயே
கண்ணினைப் போன்ற கல்வியைத் தாருமம்மா
பெண்ணில் நல்லாள் பொற்புடைத் தாயே

சர்வன் சஜீவன்
*ஜோன் பொஸ்கோ பாடசாலை*

# பக்தாத்திலும் திக்ரித்திலும் பெருமளவு ஆயுதங்கள் யு.எஸ். படைகளிடம் சிக்கின

(பக்தாத்)

ஈராக் தலைநகர் பக்தாத்திலும் முன்னாள் அதிபர் சதாம் ஹுசை னின் சொந்த ஊரான திக்ரித்திற்கு அருகிலும், அமெரிக்க இராணுவத் தினர் பெருமளவு ஆயுதங்களைக் கைப்பற்றியுள்ளனர்.

பக்தாத்தில் அமெரிக்க இராணு வத்தினர் தங்கியிருந்த முகாமிற்கு சதாம் ஹுசைனின் ஆதரவாளர் களால் நேற்று முன்தினம் றொக் கெட் தாக்குதல் நடத்தப்பட்டது. இச் சம்பவத்தை அடுத்து அமெரிக் கப் படையினர் நடத்திய சோதனை நடவடிக்கையின்போது, இந்த ஆயு தங்களைக் கைப்பற்றியுள்ளனர்.

இவ்வாயுதங்களில் ரஷ்யாவில் தயாரிக்கப்பட்ட 23 ஏவுகணைகள், ஆயிரம் பவுண் எடையுள்ள பிளாஸ் ரிக் வெடிமருந்துகள், கையெறி குண்டுகள் போன்றன காணப்பட்ட தாக அமெரிக்கப் படையினர் தெரி வித்துள்ளனர்.

ஈராக்கில் அமெரிக்க இராணு வம் நுழைந்த பின்னர் இவ்வளவு அதிகமான ஆயுதங்கள் கைப்பற றப்பட்டமை இதுவே முதல்முறை யாகும் என்று அமெரிக்க இராணுவ அதிகாரி மேஜர் மைக் ராஹட் கூறி யுள்ளார்.

இவ் ஆயுதங்கள் அயல்நாடு களில் இருந்து கடத்தப்பட்டு பக் தாத்தின் ஷோர்ஜா மார்க்கெட்டில் இவை மறைத்து வைக்கப்பட்டி ருந்தவை என்று அவர் கூறினார்.(பி-2)

உலக தரிசனம்



நவராத்திரி பண்டிகையை முன்னிட்டு புதுடில்லி திகார் சிறையில் ராம லீலா நாடகம் நடத்தப்பட்டது. இதில் நடிகர் ஒருவர் ராவணன் வேட மணிந்து சிறைக்கைதிகளுக்கு நடித்துக் காண்பிக்கிறார்.



மும்பை பாந்ட்ரா பகுதியில் கடந்த ஆண்டு அதிவேகமாக காரை செலுட்தி சாலையோரம் தூங்கிக் கொண்டிருந்தவர்களில் ஒருவர் மீது காரை ஏற்றி கொன்ற வழக்கில் பிரபல இந்தி நடிகர் சல்மான் கான் மும்பை நீதிமன்றட்தில் ஆஜரானார். இதையடுட்து மீண்டும் அக்டோபர் 6–ந் தேதி ஆஜராகுமாறு நீதிபதி அவருக்கு உட்தரவிட்டார். நீதிமன்றட்திற்கு சல்மான் கான் வந்தபோது.

# மோ. சைக்கிளில் பொருத்தப்பட்ட குண்டு வெடித்ததில் 11 பேர் பலி

## கொலம்பிய தென்பகுதியில் சம்பவம்

(போகோடா)

கொலம்பியாவின் தென்பகுதி யில் மோட்டார் சைக்கிளில் பொருத் தப்பட்ட குண்டொன்று வெடித்ததில் 11 பேர் உயிரிழந்தனர். 40 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

இடதுசாரிக் கிளர்ச்சி வாதிகளே இந்தக் குண்டு வெடிப்பிற்குப் பின் னணியில் உள்ளனர் என்று கொலம் பிய அரசாங்கம் அறிவித்துள்ளது.

5 கிலோ எடைகொண்டதாகக் கருதபபடும் இவ் வெடிகுண்டு சிற்றுண் டிச் சாலைகள், களியாட்ட விடுதி கள் நிறைந்த பகுதியில் வெடித்த தாலே அதிக உயிரிழப்புகள் நேர்ந்ததா கப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் ரோந்து நடவடிக் கையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் இருவரும் உயிரிழந்தனர் எனவும், ஏனையவர்கள் பொதுமக்கள் என வும் மேலும் கூறப்படுகின்றது.

கொலம்பிய ஜனாதிபதி அல்வாரோ இச்சமபவம் குறித்துக் கருத்து வெளி யிடுகையில், 40 ஆண்டுகளாக இடம் பெற்றுவரும் கொரில்லா யுத்தத்தி னால் ஆயிரக்கணக்கான பொது மக்கள் ஒவ்வொரு வருடமும் [illegible]றக் கின்றனர் என்றும், கிளர்ச்சி [illegible]தி களினால் மேற்கொள்ளப்ப[illegible]ம் நடவடிக்கைகளை நிறுத்தின[illegible] மட்டுமே இந்த உயிரிழப்[illegible] களைக் குறைக்க முடியும் என்[illegible] தெரிவித்துள்ளார். (பி-2

## காஷ்மீருக்குள் ஊடுருவுவதற்கு காத்திருக்கும் 1600 தீவிரவாதிகள்

(ஜம்மு)

காஷ்மீருக்குள் 1,600 தீவிர வாதிகளை ஊடுருவச் செய் வதற்கான ஏற்பாடுகளில் தீவிர மாக இறங்கியுள்ளது பாகிஸ் தானின் உளவுப் பிரிவான ஐ.எஸ்.ஐ.

அமெரிக்காவில் உலக வர்த் தக மையத்தின் மீது நடந்த தாக் குதல்களை அடுத்து பாகிஸ் தானிலுள்ள தீவிரவாத ஆதரவு முகாம்கள் மூடப்பட்டன.

இப்போது அவற்றைத் திறக் கவும் பயிற்சி பெற்ற 1600 தீவிர வாதிகளை சர்வதேச எல்லைக் கோடு, கட்டுப்பாட்டு எல்லைக் கோடு வழியாகக் காஷ்மீருக் குள் நுழையச் செய்யவும் ஐ.எஸ்.ஐ. அமைப்பு தீவிரமாக ஈடுபட்டுள்ளது என இந்தியப் பாதுகாப்புத்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. பாதுகாப்புத்துறை உயர் நிலை வட்டாரங்கள் இதனை ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தன. மேலும்,

12 சிறப்புப் புலனாய்வுப் பிரி வுகள், 13 ஏவுகணை ஏவுதளம், 25 ஆயுதப் பயிற்சி முகாம் ஆகியவை பாகிஸ்தானிலும் அதன் ஆக்கிரமிப்பிலுள்ள காஷ் மீரிலும் மீண்டும் தொடங்கப்பட் டுள்ளன. பாதுகாப்பு அம்சத்தைப் பொருத்தவரை இது கவலைக் குரியதாகும் என அவர்கள் தெரி வித்துள்ளனர்.

இருபது தற்கொலைப் படைப் பிரிவு உள்பட 1560 முதல் 1600 பேர் கொண்ட பயிற்சிபெற்ற தீவிரவாதிகள் ஊடுருவதற்குத் தயார் நிலையில் எல்லையில் உள்ளனர்.

காஷ்மீர் தீவிரவாதிகளின் நடவடிக்கையில் பாகிஸ்தான் நேரடியாக ஈடுபட்டுவருவது, தீவிரவாதிகள் முகாம்களை அது மீண்டும் திறந்துள்ளது குறித்து அமெரிக்காவிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று அத்தகவல்கள் மேலும் கூறின.(பி-2)

## 5 வயதுச் சகோதரியை சுட்டுக்கொன்ற 4 வயது சிறுவன்

(மேரிலாந்து யுஎஸ்)

வீட்டில் கிடந்த துப்பாக் கியால் 5 வயதுச் சகோதரியைச் சுட்டுக் கொன்றுள்ளான் 4 வயதுச் சிறுவன்.

இச் சம்பவத்தில் 7 வயது சகோ தரனும் காயம் அடைந்தான்.

மேரிலாந்தின் லேண்டோவர் பகுதியில் சனிக்கிழமை இத் துயரச் சம்பவம் நடந்துள்ளது.

துப்பாக்கியால் தனது சகோத ரியைச் சுட்டுக்கொன்ற சிறுவன் என்ன காரணத்திற்காக இவ்வாறு நடந்துகொண்டான் என்பது குறித்து எதுவும் தெரியவில்லை.

(பி-2)

## ஈராக்கிற்கு ஒருபோதும் சவூதி படைகளை அனுப்பாது

### அந்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சர் உறுதி

(ரியாத்)

ஈராக்கிற்கு தங்களது படை களை ஒருபோதும் அனுப்பப்போவ தில்லை என்று சவூதி அரேபியப் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித் துள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் பாதுகாப்புக் கவுன்சில் தீர்மானம் ஒன்று எடுத்தாலும் தாங்கள் படை களை ஈராக்கிற்கு அனுப்பப்போவ தில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

சவூதிப் பத்திரிகை ஒன்றிற்கு வழங்கிய பேட்டி ஒன்றிலேயே பாது காப்பு அமைச்சர் இளவரசர் காவி யம் பின் சுல்தான் தெரிவித்துள் ளார். (பி-9)

## இராமாயணத் தொலைக்காட்சி: 3 உலக சாதனைகள்


(மும்பை)

இந்திப் படத் தயாரிப்பாளர் ராமானந்த சாகர் தயாரித்த ராமா யணம் இதிகாசத் தொலைக்காட் சித் தொடர் மூன்று முறை உலக சாதனைகளை முறியடித்துள்ளது.

1987ல் டி.டி.யில் ராமாயணத் தொடர் ஒளிபரப்பானபோது 4 கோடி மக்கள் பார்த்தனர். அதன் பின் 17 நாடுகளில் 20 தொலைக் காட்சி அலைவரிசைகளில் 2 ஆயிரம் மணி நேரம் இத் தொடர் ஒளிபரப்பாகியுள்ளது. உலக அளவில் 65 கோடிமக் கள்இத் தொடரைப் பார்த்துள்ள னர் என்று பி.பி.சி. தொலைக் காட்சியின் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

இத் தொடர் இப்போது டிடி மெட்ரோவில் ஒளிபரப்பாகி வருகிறது.

உலகில் அதிக விருதுகளைப் பெற்ற இயக்குர், தயாரிப்பாளர் என்ற சாகரின் சாதனைகள் லிம்கா புத்தகத்தில் இடம்பெற றுள்ளன. (பி-2)



நியூரெம்பர்க்கில் நடைபெற்று வரும் கண்காட்சியில் இடம்பெற்றுள்ள இந்த பொம்மை மோட்டார் சைக்கிள் கடந்த 1960ம் ஆண்டு தயாரிக்கப்பட்டதாகும். "மேக் 700" என்று அழைக்கப்படும் இந்த மோட்டார் பைக்கின் விலை பல ஆயிரங்களாகும்.

## சர்வதேச அனுவாயுத பரிசோதகர்களின் வருகைக்காக

# அணுசக்தி நடவடிக்கைகளை தற்காலிகமாக இடைநிறுத்த ஈரான் தீர்மானித்துள்ளது

(தெஹ்ரான்)

சர்வதேச அணுசக்தி மைய அணுவாயுத பரிசோதகர்கள் எதிர் வரும் வியாழக்கிழமை ஈரானுக்கு செல்லவுள்ளதை முன்னிட்டு அணு சக்தி நடவடிக்கைகளை தற்காலிக மாக இடைநிறுத்துமாறு ஈரான் தனது அணுவாயுத துறையினருக்கு உத் தரவிட்டுள்ளது.

இதேவேளை, நேற்று முன்தினம் நடைபெற்ற காம் டேவிற் மாநாட் டின் பின்னர் கருத்துத் தெரிவித்த அமெரிக்க, ரஷ்ய ஜனாதிபதிகள் சர்வதேச அணுசக்தி மையத்துடன் தமது ஒத்துழைப்புகளை ஈரான் அதி கரித்துக் கொள்ள வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சர்வதேச அணுசக்தி மைய அதிகாரிகள் இவ்வாரம் தமது நாட் டுக்கு விஜயம் செய்யவுள்ளதை முன்னிட்டு தமது அணுசக்தி நட வடிக்கைகளை இடைநிறுத்துவ தாக ஈரான் அறிவித்திருந்தது.

எனினும், அணுசக்தி நடவடிக்கை களை தற்காலிகமாக இடை நிறுத்து வதானது தமது அணுசக்தி நடவடிக்கை களை கைவிடுவதாகவோ அல்லது விட் டுக்கொடுப்பதாகவோ அமையமாட் டாது என ஈரானின் வெளிநாட்டு அமைச் சர் தெரிவித்துள்ளார். (பி-9)

நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந் தூக்கின்
உயிர்க்கிறுதி யாகிவிடும்
- குறள்

வலம்புரி

## சித்தம் கலங்கிய போதனைகள்

நாட்டில் சமாதானம் நிலவுவதாக ஐக்கிய தேசிய முன்னணி அரசு கூறினாலும், நீண்ட யுத்தம் ஒன்றே நடக்கப்போவதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்துள்ளார். அரசும், விடுதலைப் புலிகளும் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டு யுத்தநிறுத்தத்தைக் கடைப்பிடித்து போர் ஆயுதங்களுக்கு ஓய்வுகொடுத்திருக்கும் நிலையில், நாட்டில் சமாதானம் நிலவவில்லை எனவும், அதற்கு மாறாக நீண்டதொரு யுத்தமே நடைபெறப் போவதாகவும் ஜனாதிபதி கூறியிருப்பது, அவரின் பேச்சு அடிக்கடி மாறுவதை வெளிப்படுத்தியுள்ளது.

அரசு முன்னெடுக்கும் சமாதான முயற்சியைக் குழப்பி மீண்டும் யுத்தத்தை நடத்தி விடுதலைப் புலிகளிடம் இருந்து நாட்டைக் காப்பாற்ற வேண்டும் எனக் கூறிவரும் ஜே.வி.பியுடன் கூட்டுச்சேருவதற்கு முயற்சித்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கூட்டு தோல்வி கண்டதன் பின்னர் நாட்டில் நீண்டதொரு யுத்தம் நடப்பதற்கான சூழ்நிலைகளே தென்படுவதாகக் கூறியிருப்பது அவர் மீண்டும் ஒரு யுத்தத்தை விரும்புகிறார் என்பதை மறைமுகமாகச் சுட்டி நிற்கின்றது.

விடுதலைப் புலிகள் கேட்கின்ற இடைக்கால நிர்வாக சபையை அவர்களிடம் ஒப்படைக்கக் கூடாது எனக் கூறிவரும் ஜனாதிபதி இப்போது மீண்டும் ஒரு யுத்தம் வெடிக்கும் ஆபத்து உண்டெனக் கூறியிருப்பது ஏதோவொரு காரணத்தால் அவர் தனது நிதானத்தை இழந்துவிட்டார் என்பதை ஊகிக்க முடிகிறது.

விடுதலைப் புலிகளிடம் இடைககால சபையைக் கொடுப்பதாயின், அவர்கள் தம்மிடம் உள்ள ஆயுதங்களைக் கையளிக்க வேண்டும் என்ற ஜனாதிபதியின் கருத்து எவ்வகையிலும் நடைமுறைக்குப் பொருத்தமற்றது. இதனை அவர் அறியாதவரும் அல்ல.

அபபடியிருந்தும், அத்தகையதொரு நிபந்தனையை ஜனாதிபதி முன்வைத்ததன் நோக்கம், நிரந்தரமானதொரு தீர்வை எட்டுவதற்கு முன்னதாக விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கைவிடப் போவதில்லை. இந்நிலையில், தான் முன்வைக்கின்ற நிபந்தனை நிச்சயமாக விடுதலைப் புலிகளால் நிராகரிக்கப்படும். அவ்வாறு நிராகரிக்கப்படும் போது, சமாதான முயற்சிகள் தோல்வி காண்பது உறுதியாகிவிடும். இதுவே ஜனாதிபதியின் இலக்காகும்.

சமாதான முயற்சிகளுக்கு ஜனாதிபதி பூரண ஒத்துழைப்பு வழங்கி வருகிறார் எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா ஐ.நா. சபையில் பெருந்தன்மையோடு தெரிவிக்க ஜனாதிபதியோ நாட்டில் யுத்தம் மீண்டும் ஏற்படப் போவதாகக் கூறுவது அவரின் மனநிலையில் ஏற்பட்ட குழப்பமே அன்றி வேறெதுவுமாக இருக்க முடியாது.

# காற்றினால் பரவும் நோய்களிலிருந்து உங்கள் பிள்ளைகளைக் காப்பாற்றிடுங்கள்

சளி, இருமல், நிமோனியா... இவற்றுக்கெல்லாம் எந்தக் குழந்தையும் விதி விலக்கல்ல.

இந்த நோய்கள் எல்லாமே காற்றோடு நேரடித் தொடர்பு கொண்டவை. சுவாசக் குழாய் வழியாக மிக எளிதில் நம்மைத் தாக்குகின்றன. இந்த நோய்க்கான கிருமிகள்.

குழந்தைகளுக்கு சுவாசக் குழாயில் ஏற்படும் பிரச்சினையை அப்போதே முழுமையாகக் கவனித்து களையவேண்டும். இல்லாவிட்டால் வயதாகும் காலத்தில் மிகக் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும். சுவாசக் குழாயல் ஏற்படும் நோய்த் தாக்குதல் நுரையீரலையே பலவீனப்படுத்தும் தன்மையுடையது. சுவாசக் குழாயின் மேற்பகுதியில் ஏற்படும் தொற்று நோய்களால் ஜலதோஷம் தொண்டைக் கரகரப்பு, தொண்டைவலி, காதுவலி மற்றும் சீழ் வடிதல் என பல்வேறு பிரச்சினைகளை குழந்தைகள் அனுபவிக்க நேர்கிறது. நோய் கிருமிகள் சுவாசக் குழாயின் கீழ்ப்பகுதியைத் தாக்கினால் நிமோனியா வருகிறது.

இந்தப் பிரச்சினை ஏதோ சில ஆயிரம் குழந்தைகளுக்கு என்று நினைத்துவிடாதீர். கிட்டத்தட்ட 40 லட்சம் குழந்தைகள் இந்த நோயால் மரணமடைகிறார்கள். இந்தக் கணக்கு ஓராண்டுக்கு... என்பது தான் இன்னும் அதிர்ச்சியான விஷயம்.

தொற்றுநோய்க் கிருமிகள் மூக்கு வழியாக மட்டுமல்லாமல் காது வழியாகவும் சென்று நோயைப பரப்புகின்றன. இதனால் தான் பெரும்பாலான குழந்தைகள் செவிடாகிப் போகிறார்கள்.

### சுற்றுச் சூழலும் காரணம்

முன்பெல்லாம் கிராமங்களும் நகரங்களும் ஓரளவுக்காவது ஆரோக்கியமான சுற்றுச் சூழலுடன் திகழ்ந்தன. கிராமப் பகுதிகளில் நல்ல குடிநீரும் ஆரோக்கியமான காற்று வசதியும் கிடைத்தன. நகரங்கள் கூட அந்த அளவிற்கு மோசமில்லாமல் இருந்தன. ஆனால் இன்று திரும்பின பக்கமெல்லாம் குப்பைகள், பிளாஸ்ரிக் கழிவுகள், தொழிற் கூடங்களில் இருந்து வெளிவரும் நச்சுப் புகை என மக்கள் மூச்சு விடவே திணறிக்கொண்டிருக்கும் நிலை.

பெரும்பாலான கிராமங்களில் தொழிற்சாலைகள் அசுரத்தனமாக விஷம் கக்கியபடி உள்ளன. இந்த ஆரோக்கியமற்ற சூழல் காரணமாக ஏராளமான தொற்று நோய்க் கிருமிகள் உருவாகி வருகின்றன.

தொற்று நோய் பரவுவதற்கு இன்னொரு முக்கிய காரணம் சுகாதார மற்ற குடிநீர். நீரைக்காய்ச்சிக் குடிக்க வேண்டும் என்ற அடிப்படை உணர்வு இன்னமும் பலருக்கு இல்லாமல்தான் இருக்கிறது.

நோய்க் கிருமிகள் தாக்கப்பட்ட ஆரம்ப நிலையில் பல குழந்தைகள் பால் குடிக்காமல் மந்தமாகக்



காணப்படுவார்கள். அவர்களது உடல் காய்ச்சலால் கொதிக்கும் இல்லாவிட்டால் வழக்கத்திற்கு மாறாகக் குளிர்ந்து காணப்படும். இந்தநிலை ஏற்படும் போதே நாம் எச்சரிக்கையுடன் குழந்தைக்கு சிகிச்சைபெற வேண்டும். குடிநீர், உணவு, துணிகள் அனைத்திலுமே மிகவும் சுத்தத்தைக் கடைப்பிடிக்க

## மருத்துவ விளக்கம்

வேண்டும். நல்ல டாக்டரிடம் காட்டி நோயை முற்றிலுமாகக் குணபபடுத்தி விடவேண்டும்.

### நிமோனியா

நிமோனியா சாதாரண நோயல்ல. இதுவும் மரணத்தின் விளிம்பிற்கே கொண்டுசெல்லும் ஓர் அபாயகரமான நோய்தான். இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்கள் மூச்சு விடும் போது விலா எலும்புகள் அளவுக்கு அதிகமாக உள்ளே அழுத்தி எழும், மூச்சு அடைக்கும், தொண்டைக் கமறல் ஏற்படும், உடல் நீலம் பாரிக்கும். இந்த அறிகுறிகள் ஏற்பட்டவுடனேயே குழந்தைகளுக்கு தீவிர சிகிச்சையைத் தொடங்கி விடுங்கள.

நிமோனியா அல்லாத சாதாரண குளிர் காய்ச்சல் சில குழந்தைகளுக்கு வரக்கூடும். இது சில தினங்களிலேயே குணமாகக் கூடியது தான் என்றாலும் இதனைத் தீவிரமடைய விடாமல் முதல் கட்டத்திலிருக்கும் போதே டாக்டரிடம் காட்டிவிடவும்.

இருமல், சளி, சுவாசச் சிக்கல்கள போன்றவை தொடர்ந்து ஒரு மாதம் வரை நீடித்தால் அது ஆஸ்துமா, காசநோய், நாள்பட்ட இருமலாக இருக்கலாம்.

### குழந்தைகளுக்கும் ஆஸ்துமா

ஆஸ்துமா குழந்தைகளை மிக எளிதிலேயே தாக்கும் ஆபத்து இருக்கிறது.

### ஆஸ்த்துமாவின் அறிகுறிகள்

* என்னதான் மருந்து உட்கொண்டாலும் அதிகமாக மூச்சுவாங்கும்.
* உடல் நீலமாக மாறும்.
* முகம் கடு கடுப்பாகக் காட்சி தரும்.
* கடுமையான காய்ச்சல் வரும்.
* மூச்சு விடும்போது சத்தம் வரும்.
* நுரையீரல் துடிப்பு 20-25 சதவீதம் குறையும்.
* குழந்தைகள் மயக்கமடையும்.
* சாப்பிட மறுத்து அடம்பிடிக்கும்.

### ஆஸ்துமா நோயிலிருந்து நிவாரணம் பெற

* அறையைத் தூசி, தும்பு இல்லாமல் சுத்தமாக வைக்கவும்.
* குழந்தைகளின் அறையில் பீடி, சிகரெட் பிடிப்பதைத் தவிர்க்கவும்.
* பருவ காலம் மாறும்போது மழைக் காலத்தில் ஆஸ்துமா நோய அதிகமாகும். அதனால் அதிகம் வெளியே செல்வதைத் தவிர்க்கவும்.
* வீட்டில் விலங்குகளை வளர்த்தல் மற்றும் செடி கொடிகள் மரம் வளர்ப்பதைத் தவிர்க்கவும்.
* அலர்ச்சிக்குக் காரணமான எந்தப் பொருளையும் சாப்பிடக்கொடுக்காதீர்கள்.
* இரண்டு மாதத்திற்குக் குறைவான வயதுடைய குழந்தைகளின் மூச்சுவிடும் தன்மை நிமிடத்திற்கு 50 சுற்றுக்கும் அதிகமானால் அக் குழந்தையின் உடல் நீல நிறமாக மாறத்துவங்கும். அப்போதே உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லுங்கள்.
* குழந்தைகளின் படுக்கை விரிப்புகளை அடிக்கடி வெய்யிலில் காய வைக்கவும்.
* குழந்தைகளை வெறும் வயிற்றோடு படுக்க வைக்காமல் ஏதேனும் சாப்பிடக்கொடுத்துத் தூங்க வைக்கவும். அவர்களுக்கு நல்ல ஓய்வு தேவை. இத்தகைய குழந்தைகளுக்கு திரவ உணவு அதிகமாகக் கொடுக்கவும். தினமும் குழந்தைகளை ஈரத் துணியால் துடைக்கவும். மூக்கை அடிக்கடி சுத்தம் செய்யவும்.
* ஆஸ்துமா பரம்பரை நோயாக இருப்பின் குழந்தையை கவனத்தோடு பார்த்துக்கொள்ளவது அவசியம்.
* தூசு நிறைந்த காற்று, அசுத்தம், கூட்டம் போதிய வெளிச்சம் இன்மை நோயை இன்னும் கடுமையாக்கும்.
* புகைபிடிக்கும் பழக்கமுடையவரின் குழந்தைக்கு ஆஸ்துமா நோய ஏற்பட வாய்ப்புகள் அதிகம.

**டாக்டர் M.N.சங்கர்**

### சிகிச்சை முறை

சாதாரண குளிர்காய்ச்சல் எனில் ஆன்டிபயாடிக் மருந்து கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. குழந்தைக்குக் காய்ச்சல் குறைய இருமல அலர்ச்சிக்கான மருந்துகளைக் கொடுக்கலாம். மூச்சு விடும்போது தொண்டை மற்றும் மார்பில் கர் என்ற சத்தம் வரும்போது எச்சரிக்கையாக இருக்கவும். டாக்டரிடம் சென்று குழந்தையின் சுவாசக் குழாயை மேலும் அகலமாக்க மருந்து கொடுக்கவும்.

குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து மிக்க உணவைக் கொடுக்கவும். விற்றமின் 'ஏ' குறையாமல் பார்த்துக் கொள்ளவும். விற்றமின் 'ஏ' குழந்தைகளுக்கு அதிகமாக நோய எதிர்ப்புச் சக்தியைத் தருவதோடு, தொற்று நோய்க் கிருமிகளிலிருந்தும் குழந்தைகளைப் பாதுகாக்கின்றது.□

## 5 ஆண்டு திட்டத்தால் 6 ஆயிரம் பேர் பலன்

(யாழ்ப்பாணம்)

போரூட் நிறுவனத்தினால் 1998 இல் ஆரம்பிக்கப்பட்ட ஐந்தாண்டுத திட்டமாகிய வீடமைப்பு, மலசலகூடம், குடிநீர் உள்ளிட்ட சமூக அபிவிருத்தித்திட்டம் மூலம் யாழ். மாவட்டத்தில் 72 கிராமங்களைச் சேர்ந்த 6ஆயிரம் குடும்பங்கள் பயன் பெற்றுள்ளன.

இந்த ஐந்தாண்டுத்திட்டம் இவ்வருடத்தில் பூர்த்தியடையவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போரூட் நிறுவனத்தினால் 72 கிராமங்களில் அமுல்செய்யப்பட்ட கிராமியக் கடன்திட்டத்தின் மூலம் சுமார் 60 லட்சம் ரூபா சுழற்சி நிதியாக மக்களுக்கு வழங்கப்பட்டிருப்பதாக அதன் திட்ட முகாமையாளர் செல்வி.எறின் றொன்செத் குறிப்பிட்டார். (உ-16)

### தினசரி தியானம்

## மேலான மதம்

பிறர்க்கு நன்மை செய்வதே மேலான மதம், அகம் பாவமோ, பிரதிபலனை எதிர்பார்த்தோ இல்லாமல் ஒவ்வொரு வாரமும் சிலமணி நேரமாவது சுயநலமற்ற தொண்டாற்றுங்கள். உங்கள் கடமைகளை இதே உற்சாகத்துடன் செய்யுங்கள். கடமையைச் சரியாகச் செய்தல் போற்றுதலுக்குரியதாகும். இதனைக் கடவுளுக்கு அர்ப்பணியுங்கள். உங்களிடம் உள்ளவற்றை பிறருடன் பங்கிட்டுக கொள்ளுங்கள். உலகம் உங்கள் குடும்பமாயிருக்கட்டும். சுயநலத்தை அகற்றுங்கள். இவைகளே மேலான மதக் கொள்கைகளாகும்.

சுவாமி சிவானந்தர்

## வடக்கு-கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய விழா

(திருகோணமலை)

வடக்கு-கிழக்கு மாகாண தமிழ் இலக்கியவிழா எதிர்வரும் 17, 18, 19 ஆம் திகதிகளில் வவுனியாவில் காலை, மாலை அமர்வுகளாக இடம்பெறவுள்ளது.

இம் மூன்று தினங்களும் 'ஈழத்து மரபுவழித் தமிழ்ப்புலமையாளர்கள்' என்ற தொனிப் பொருளில் காலையில் ஆய்வரங்கு இடம்பெற விருப்பதுடன், மாலையில் கலை நிகழ்வு மற்றும் அறிஞர்கள், பெரியார்களின் உரைகள் ஆகியன இடம்பெறவுள்ளன.

காலை அமர்வுகள் முறையே வன்னியூர் கவிராயர் அரங்கு, ஆ.மு. ஷரிபுதீன் அரங்கு, க.குமார சுவாமி அரங்கு ஆகியவற்றிலும் மாலை அமர்வுகள் முறையே; என். கே. பத்தமநாதன் அரங்கு, மாவீரன் பண்டாரவன்னியன் அரங்கு, ஆர். சிவ குருநாதன் அரங்கு ஆகியவற்றிலும் இடம்பெறவுள்ளன.

ஆய்வரங்கில் பேராசிரியர் சோ. கிருஷ்ணராசா, கலாநிதி எஸ்.சிவலிங்கராசா, கலாநிதி செ.யோகராசா, விரிவுரையாளர் றமஸ அப்துல்லா, பேராசிரியர் சி.மௌனகுரு, பேராசிரியர் இரா.வை. கனகரத்தினம், பேராசிரியர் சித்திரலேகா மௌனகுரு, விரிவுரையாளர் க.ரகுவரன், க.மகேஸ்வரலிங்கம், சட்டத்தரணி கா.சிவபாலன், காசுபதி நடராசா, பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

இறுதிநாள் மாலை நிகழ்வில் இலக்கியநூல் பரிசுவழங்கல், ஆளுநர் விருது வழங்கல் என்பன இடம் பெறவுள்ளன. (உ)

## சஞ்சீவன் நினைவு மென்பந்துச் சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத் தமிழ் மாணவர் ஒன்றியம் நடாத்திவரும் "சஞ்சீவன்" ஞாபகார்த்த மென்பந்து சுற்றுப் போட்டி இன்று காலை 8.30 மணிக்கு யா/கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இப் போட்டியில் பங்குபற்றும் அணிகளின் விபரம் வருமாறு.

யா/ஹிரிபேக்கல்லூரி. எதிர் யா/ஸ்கந்தவரோதயாகல்லூரி, யா/நெல்லியடி மத்தி மகாவித்.எதிர் யா/அல்லைப்பிட்டி பராசக்தி வித்., யா/நயினாதீவு ம.வி.எதிர் யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி. (உ-10)

## இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு

# சட்டமூலத்தை திருத்தவேண்டுமாயின் என்னுடன் கலந்துரையாடவேண்டும்

## ஜனாதிபதி சந்திரிகா பிரதமருக்குக் கடிதம்

(கொழும்பு)

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு சம்மந்தப்பட்ட சட்டமூலத்தில் திருத்தங்களை கொண்டுவர உத்தேசித்தால், அது தொடர்பாக என்னுடன் பேச்சு வார்த்தை நடத்த வேண்டும் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா, பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில், இவ்ஆணைக்குழு ஜனாதிபதியின் அதிகாரத்துக்கு கீழ் கொண்டுவரப்படவுள்ளதால், இச் சட்ட மூலத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமாயின், அது தொடர்பாக பாராளுமன்றத்தில் அங்கத்துவம் வகிக்கும் கட்சித் தலைவர்களுடனும் ஆலோசனை நடத்த வேண்டும்.

அண்மையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் நீதி அமைச்சர் டபிள்யூ.ஜே.எம். லொக்குபண்டார, மேற்படி சட்ட மூலத்தில் திருத்தங்கள் கொண்டு வரப்படவேண்டும் எனக்கோரி பிரேரணை ஒன்றை சமர்ப்பித்திருந்தார்.

எனினும்,உரிய சட்ட திட்டங்களுக்கு அமைய இந்தப் பிரேரணை சமர்ப்பிக்கப்படவில்லை என்றும் அது தொடர்பாக எந்தவித ஆலோசனையையும் நடத்த வேண்டாம் என அமைச்சரவை செயலாளருக்கு ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

அமைச்சரவையில் சமர்ப்பித்து உரிய கலந்துரையாடல் இன்றி பாராளுமன்றத்தில் இந்த திருத்தச் சட்டத்தை நிறைவேற்ற எடுக்கும் தீர்மானத்தை என்னால் அனுமதிக்க முடியாது. அத்துடன் ஆணைக்குழுவில், உள்ள வெற்றிடத்தை நிரப்புவதற்கான சிபார்சினை செய்யுமாறு அரசியல் நிர்ணய சபைக்கு நான் தெரிவித்திருந்த போதிலும் இதுவரைக்கும் அதற்குரிய பதில் கிடைக்கவில்லை.

இதனால் இச்சட்ட மூலத்தை திருத்துவதற்கு முன்னர் உறுப்பினர் வெற்றிடத்தையும் ஊழியர் பற்றாக் குறையையும் தீர்த்து மீண்டும் ஆணைக் குழு நடவடிக்கைகளை அமுல்படுத்த வேண்டும் எனவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (தி-61)

## அதிகாரப் பரவலாக்கல் குறித்து ஆராய ஸ்ரீ.மு.கா. குழு பிரிட்டிஷ் செல்லும்

(கொழும்பு)

ஐக்கிய இராச்சியத்தின் சமஷ்டி முறையின் கீழ் சிறுபான்மை இனத்தவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரப்பரவலாக்கல் குறித்து ஆராய்வதற்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தலைமையிலான குழுவினர் பிரிட்டிஷ் பயணமாகவுள்ளனர்.

இடைக்கால நிர்வாக சபை அரசியல் யாப்பு தொடர்பாக ஆராய்ந்து வரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பத்துப் பேர் கொண்ட குழுவினரே பிரிட்டிஷ் பயணமாகவுள்ளனர்.

சமஷ்டி முறையின் கீழ் சிறுபான்மையினருக்கு வழங்கப்பட வேண்டிய அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாக தமது கட்சி யோசனைகளை தயாரித்துள்ளதாக அதன் செயலாளர் ஹசன்அலி தெரிவித்துள்ளார்.

இவ்யோசனைகள் தொடர்பாக பிரிட்டனில் உள்ள சட்ட விற்பன்னர்களுடன் கலந்தாலோசிக்கப்படவுள்ளது.

இதேவேளை, பிரிட்டனுக்குச் செல்வதற்கு முன்னர் இந்தியாவில் சில மாநிலங்களில் நடைமுறையில் உள்ள அதிகாரப்பரவலாக்கல் குறித்து ஆராயும் பொருட்டு இக்குழுவினர் இந்தியாவுக்கும் செல்லவுள்ளனர். (தி-61)

## பிரதமர் நாடு திரும்பினார்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் 58வது பொதுச்சபைக்கூட்டத்தில் கலந்து கொள்ளும் முகமாக கடந்த 20ந்திகதி நியூயோர்க் சென்ற பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா நேற்று அதிகாலை நாடு திரும்பியுள்ளார்.

இவருடன் அமெரிக்கா சென்றிருந்த சிரேஷ்ட அமைச்சர்கள் அடங்கிய குழுவினரும் நாடு திரும்பியுள்ளனர்.

நியூயோர்க் சென்றிருந்த பிரதமர் ஐ.நா.செயலகத்தில் உரையாற்றியதுடன் பல்வேறு நாடுகளின் தலைவர்கள், ஐக்கிய நாடுகள் சபை செயலாளர் நாயகம் கோபிஅனான் உட்பட பல முக்கிய பிரதிநிதிகளையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார். இச்சந்திப்பின் போது இலங்கையில் இனப்பிரச்சினை விடயம் உட்பட பொருளாதாரம், அபிவிருத்தி திட்டங்கள் குறித்தும் ஆராயப்பட்டன. (தி-61)

## மன்னாரில்...

காரிகள், விடுதலைப் புலிகளின் மன்னார் துணை அரசியல் பொறுப்பாளர் மூர்த்தி ஆகியோர் சம்பவ இடத்திற்குச் சென்று பார்வையிட்டதுடன், சமாதான முயற்சிகளிலும் ஈடுபட்டனர்.

இதனை அடுத்து இடம்பெற்ற சமரச மாநாட்டில் தேவாலயம் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என அரச அதிபர் எஸ்.விஸ்வலிங்கம் உறுதியளித்தார்.

இதேவேளை, மன்னார் நகரின் பாதுகாப்புக் கடமையில் சுமார் 200க்கும் அதிகமான பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (வ)

## சுகாதாரத்...

பிக்க சுகாதார அமைச்சு ஏற்றுக் கொண்டதை அடுத்து, நிதியமைச்சுக்குக் கால அவகாசம் வழங்கும் வகையில் தொழிற்சங்கங்கள் தமது வேலை நிறுத்தப் போராட்டத்தை நவம்பர் 4 ஆம் திகதிவரை ஒத்தி வைத்துள்ளன. இதன்படி 13 நாள் வேலை நிறுத்தம் முடிவடைகின்றது. வேலை நிறுத்தத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட மகரஹம புற்று நோய் வைத்தியசாலையில் கதிர் வீச்சு சிகிச்சைப் பிரிவு ஊழியர்களின் வேலைநிறுத்தத்தால் 300 வரையான நோயாளர்கள் தினசரி வழங்கப்படும் கதிர்வீச்சு சிகிச்சையைப் பெறமுடியாமல் வேதனைப்பட்டனர். இந்தியாவில் இருந்து உதவியாளர்களைத் தருவிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததாயினும், இதுவரை எவரும் வந்து சேரவில்லை. என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (வ)

## கலைப்பீட...

வர்கள் கலந்துகொண்ட இக் கலந்துரையாடலில், சிரேஷ்ட மாணவர்கள் முதலாம் வருட மாணவர்களின் கல்விச் செயற்பாட்டுக்குத் தொடர்ந்தும் பூரண ஒத்துழைப்பு வழங்குவதாக உறுதியளித்துள்ளனர்.

இதேவேளை, வெளி நபர்களுடன் சம்பந்தப்பட்ட முதலாம் வருட மாணவர்கள் மீது கடுமையான நடவடிககை எடுப்பதாக சிரேஷ்ட மாணவ ஆலோசகர் உறுதியளித்ததாகக் கலைப்பீட மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது. (இ)

## மேலும் 15 ஆயிரம் பேர்; இளை... படையணிக்குச் சேர்க்கப்படு...

(கொழும்பு)

இளைஞர் யுவதிகளின் திறன்களை விருத்தி செய்து உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தி கொடுக்கும் நோக்கில் உருவாக்கப்பட்ட 'இளைஞர் படையணிக்கு' மேலும் 15,000 பேர் புதிதாக இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாக தெரிய வருகிறது.

கடந்த வியாழனன்று இடம் பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் உரையாற்றும் போது மின் சக்தி எரிபொருள் பிரதி அமைச்சர் சாதல ரத்நாயக்கா இத்தகவலை தெரிவித்துள்ளார்.

அபிவிருத்தி அடைந்த ஏனைய நாடுகளுடன் சமனான அளவில் போட்டியிடக்கூடிய திறமையான எதிர்கால சந்ததியை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட இவ் இளைஞர் படையணியில் இணைத்துக் கொள்ளப்படும் இளை... களின் திறமைகள் இனங்கா... பட்டு அவர்கள் சிறந்த முறை... பயிற்றுவிக்கப்படுவர்.

இவர்களுக்கு 18 மாதங்... தொடர் பயிற்சி வழங்கப்ப... அதேவேளை தலா 2,500 ரூ... கொடுப்பனவும் மாதாந்... வழங்கப்படும்.

அடுத்த ஆண்டு நடுப்பகு... 40,000 இளைஞர் யுவதிக... இப்படையணிக்கு இணைத்து... கொள்ளப்படவுள்ளனர்.

இவ் எண்ணிக்கை வரு... இறுதிக்குள் சுமார் ஒரு இலட்ச... ஆகவும் அதிகரிக்க நடவடிக்... எடுக்கப்படும் எனவும் பி... அமைச்சர் மேலும் தெரிவித்... ளார்.

மேற்படி பயிற்சிகளிற்காக ... 50 கோடி ரூபா நிதியை ... சாங்கம் ஒதுக்கியுள்ள... குறிப்பிடத்தக்கது. (உ-...)

## "சங்கமம்" நிகழ்வு நாளை மறுதின...

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட மகளிர் அரசியல் துறையினரின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்ட மகளிர் அமைப்புகளின் சங்கமம் எனும் நிகழ்வு நாளை மறு தினம் வியாழக்கிழமை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முற்பகல் 9 மணி முதல் பிற்பகல் 5 மணி வரை நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட பெண்கள் எதிர் நோக்கிவரும் பிரச்சினைகள் அவர்களின் தேவைகள் குறித்து விரிவ... ஆராயப்படுவதுடன் முக்... தீர்மானங்கள் பலவும் எடுக்... படவுள்ளது. யாழ்.மா...ட்ட மக... அமைப்புகளின் ...திநிதி... மற்றும் பல்வேறு...ட்ட நிலை... இருக்கும் பெண்கள் என பெ... திரளானோர் இந்நிகழ்வில் கூடு... என எதிர்பார்க்கப்ப...து.

## அரச அதிபருடன் நாளை சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

உடற்கல்வி டிப்ளோமாதாரிகள் சங்கப்பிரதிநிதிகள் நாளை யாழ். அரச அதிபர் எஸ்.பத்மநாதனை சந்தித்து கலந்துரையாடவுள்ளனர்.

வேலைவாய்ப்பு தொடர்பாக இக்கலந்துரையாடல் இடம் பெறவிருப்பதால் இத்துறை சார்ந்த மாணவர்கள் அனைவரையும் நாளை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் பிறவுண் வீதியில் அமைந்துள்ள பிறைட்மன் கல்வி நிலையத்தில் ஒன்று கூடுமாறு சங்கத் தலைவர் ப.தர்மகுமாரன் கேட்டுள்ளார். (இ)

## யாழ். பல்கலையில் இன்று புகைப்படக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக நூ... தில் இன்று முற்பகல் 1... மணியளவில் புகைப்படக்கண்... நடைபெறவுள்ளது.

யுனெஸ்கோ நிறுவனத்... நிதியுதவியுடன் ஊடக வளங்... நிலையம் நடத்தும் இந்நிகழ்... பத்திரிகையாளர்களிற்கான பு... பட களப்பயிற்சியில் எடுக்கப்... படங்கள் கண்காட்சியில் வை... படவுள்ளன.

கண்காட்சியை யாழ்.பல்... கழக துணைவேந்தர் பேரா... எஸ்.மோகனதாஸ் ... வைப்பார்.

## மீளக்குடியமர்வு குறித்த...

யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா, கடற்படை மற்றும் பொலிஸ் பிரிவு உயர்மட்ட அதிகாரிகள், குடாநாட்டுப் படைத் தளபதிகள் ஆகியோரும் சமாதானத்திற்கும், நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழுவின் சார்பில் அதன் தலைவர் டி.ஆர். அருமைநாயகம், யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை, தென்னிந்திய திருச்சபையின் ஆயர் கலாநிதி மேதகு எஸ். ஜெபநேசன், இணைச் செயலாளர் வண.பிதா ஜே.பீ. செல்வராசா, எஸ். பரமநாதன் மற்றும் உறுப்பினர்களும் இக்கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

வசாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தினை மீள இயக்க தாம் அனுமதி வழங்கியபோதிலும் கூட, கல்வித் திணைக்களம். இது விடயத்தில் அசமந்தப் போக்கைக் கடைப் பிடிப்பதாக படைத்தரப்பினர் இச்சந்தர்ப்பத்தில் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இரு தரப்பினரும் இணைந்து சில தீர்மானங்களை எடுத்துள்ளனர்.

★ தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் உள்ள தென்னிந்தியத் திருச்சபை தேவாலயத்தில் பிரதி ஞாயிறுதோறும் ஆராதனை நடத்த அனுமதித்தல்.

★ யூனியன் கல்லூரி, மகாஜனக் கல்லூரி ஆகியவற்றுக்குச் செல்லும் மாணவர்கள் மீதான சோதனை நடவடிக்கைகளை இயலுமானவரை தளர்த்துதல்.

★ ஏ-9 பாதையை தினமும் மாலை 6.00 மணிவரை திறந்திருத்தல்.

★ சாவகச்சேரி, கச்சாய் ஆகிய கடற்பரப்பில் கட்டுமரம் பாவித்து மீன்பிடிக்க அனு...

★ யாழ். நகர் ந... வில் பகுதிகளில் அ... களவு நடவடிக்கைக... படுத்த பொலிஸாரின... ரோந்து நடவடிக்கை... தரித்தல் ஆகிய தீர்மா... கப்பட்டு, இவற்றை ... அமுல்படுத்துவது ... கம் காணப்பட்...து.

இது தவிர யாழ்... உள்ள பொலிஸ் நிலை... நிலவும் தமிழ் தெ... ருக்குள்ள கட்டுப்பாடு கு... தாபித்தபோது, யாழ்ப்... இளைஞர்கள் பொலி... இணைய முன்வரவே... சாரப்பட தளபதி சரத் ... கருத்துத் தெரிவித்திரு... அறியப்படுகின்றது.

## மன்னார் தேவாலயத்தை...

நடத்தினர். இதனால் அங்கு ஏற்பட்ட பதற்றமான சூழ்நிலையைத் தணிக்க நேற்று இரவு முதல் இன்று அதிகாலை நான்கு மணி வரை உத்தியோகப்பற்றற்ற ஊரடங் குச் சட்டத்தை மன்னார்ப் பொலிஸார் பிறப்பித்துள்ளதுடன், கடுமையான ரோந்து நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

நீண்டகால வரலாற்றைக் கொண்ட இவ்வாலயத்தை இனந்தெரியாதோர் இடித்துத் தரைமட்டமாக்கியதாகத் தெரிவிக்கப்பட்டபோதும், இத்தாக்குதல் சம்பவத்தில் எருக்கலம்பிட்டியைச் சேர்ந்தவர்களே பின்னணியில் இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

### அமைச்சர் நூர்தீன் மசூர் மன்னார் விரைவு

இச்சம்பவத்தை அடுத்து மன்னார் நகரில் உள்ள அனைத்து முஸ்லிம் மக்களின் வர்த்தக நிலையங்களும் இழுத்து மூடப்பட்டன. இந் நிலையில் முஸ்லிம்களுக்கு எதிராக வன்முறைகள் தலைதூக்கலாம் என்ற காரணத்தினால் கொழும்பில் தங்கியிருந்த வன்னி நாடாளுமன்ற உறுப்பினரும், அமைச்சருமான நூர்தீன் மசூர் அவசர அவசரமாக விசேட ஹெலி மூலம் மன்னார் தளளாடி முகாமுக்குச் சென்றார். அங்கிருந்து தரை மார்க்கமாக மன்னாருக்கு அமைச்சர் செல்ல முற்பட்ட போது, மக்களின் எதிர்ப்பினால் அவர் அங்கு செல்லவில்லை. இதனை அடுத்து, தள்ளாடி இராணுவ முகாமில் உயர் மட்ட மாநாடு ஒன்றை நடத்தினார். இதனைத் தொடர்ந்து மன்னார் செயலகத்திலும் அவசர மாநாடு ஒன்று நடைபெற்றது. இம்மாநாடு சுமார் 6 மணி நேரம் நடைபெற்றது.

இம்மாநாட்டில் வன்னி ... நாடாளுமன்ற உறுப்பினா... வம் அடைக்கலநாதன், ... ஆனந்தன், மன்னார் ஆ... வண. இராஜப்பு யோசேப், ... பிராந்தியப் பொலிஸ்மா அ... வவுனியாப் பிராந்தியப் பொலி... அத்தியட்சகர், மன்னார் பிரி... மன்னார் அரச அதிபர் ம... பிரதிநிதிகளும் கலந்து... னர்.

இம்மாநாட்டை அடுத்து ... கப்பட்ட தேவாலயத்தை ... தில் தற்காலிகக் ... அமைத்தும், வழிபாட்டுக்கு ... செய்வதாகவும், கடற்றொழிலுக்... செல்லும் மக்கள் தேவாலயத... பாதுகாப்பாகத் தங்கிச் செல்... கும் ஆவன செய்வது ... தீர்மானிக்கப்பட்டுள்ளது.


உ

# துயர் பகிர்கின்றோம்

## துருவ நட்சத்திரம் மறைந்துவிட்டது

கோப்பாய்

## அமரர் பண்டிதர் பிரம்மஸ்ரீ ச.பஞ்சாட்சரசர்மா

அவர்கள்

சிவபதம் அடைந்த செய்தி கேட்டு துயரடைந்தோம். அந்தண சமூகம் அன்னாரை எஞ்ஞான்றும் நினைவுகூர்ந்து நிற்கும் என்பதல் ஐயமில்லை. அன்னாரின் ஆன்மா இறைவனின் பாதாரவிந்தத்தில் ஐக்கியமாக எல்லாம்வல்ல எம்பெருமானை வேண்டுவதுடன் துயருற்றிருக்கும் அவர்தம் குடும்பத்தவரின் துயரில் நாமும் பங்கு கொள்கிறோம்.

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி

சர்வதேச இந்துகுருமார் ஒன்றியம்,
குருகுலப் பொறுப்பாண்மைக் குழு,
ஆசிரியர்கள், உத்தியோகத்தர்கள்
மற்றும் குருகுல மாணவர்கள்.

(7647)


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.09.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்...